வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 05.10.2022 புதன்கிழமை | இதழ் : 300 | பக்கங்கள் : 16

## நாடு மீண்டெழ வேண்டுமானால் இனப் பிரச்னைக்கு தீர்வு தேவை!



### சந்திரிகா அம்மையார் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 05

“பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கண்டால் மாத்திரம் நாடு மீண்டெழாது. தேசிய இனப்பிரச்னைக்கும் தீர்வு கண்டே ஆக வேண்டும்.”

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், “நாடு வங்குரோத்து நிலை அடைந்தமைக்கு ராஜபக்ஷக்களே முழுக்காரணம். இதை எவரும் மறுதலிக்க முடியாது. ராஜபக்ஷ யுகம் மீண்டும் ஏற்பட மக்கள் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.”

15

## எரிவாயு, சிமெந்தின் விலை குறைகின்றது!

கொழும்பு, ஒக். 05

சிமெந்தின் விலை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 100 ரூபாயால் குறைவடைந்தது. இதேபோன்று இன்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 200 -300 ரூபாயால் சமையல் எரிவாயுவின் விலையும் குறைக்கப்படவுள்ளது.

ரோக்கியோ சுப்பர், நிப்பொன் இசன்சீ சன்ஸ்தா, இன்சீ மகாவலி மரைன் பிளஸ் ஆகிய சிமெந்தின் ஒரு பைக்கெற் (50 கிலோ) 100 ரூபாயால் குறைக்கப்பட்டது. இதன்படி, 3,200 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட சிமெந்து 3,100 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்று நள்ளிரவு முதல்

15

# 22ஆவது திருத்தத்துக்கு பெரமுன கட்சி எதிர்ப்பு!

### ஒற்றையாட்சி முறையை பாதுகாக்க நிறைவேற்று அதிகாரம் தேவையாம்!

கொழும்பு, ஒக்ரோபர் 22

22ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு பெரும்பான்மை பலம் கொண்ட - ஆளும் கட்சியான சிறீ லங்கா பொதுஜன பெரமுன எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இதனால், அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு புதிய தடை ஏற்பட்டுள்ளது.

15

## ஐ. எம். எவ்வுடன் வரைவு உடன்பாடே எட்டப்பட்டது

### பிரதமர் தினேஷ் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 05

சர்வதேச நாணய நிதியத்துடன் வரைவு ஒப்பந்தம் மட்டுமே எட்டப்பட்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ “ஐ. எம். எவ்வுடனான ஒப்பந்தத்தை அரசாங்கம் ஏன் பாராளுமன்றில் சமர்ப்பிக்கவில்லை” என்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சர்வதேச நாணய நிதி

15

### முட்டாள், கைக்கூலி என விளித்ததால்

## பாராளுமன்றத்தில் கடும் வாக்குவாதம்!

கொழும்பு, ஒக். 05

முட்டாள் என்று தயாசிறி ஜயசேகரவை நிமல் லான்ஷாவும் நிமல் லான்ஷாவை அரசின் கைக்கூலி என்று தயாசிறி ஜயசேகரவும் விளித்ததால் நேற்று பாராளுமன்றில் கடும் வாதப் பிரதிவாதம் எழுந்தது.

நேற்று சபாநாயகர் தலைமையில் பாராளுமன்ற அமர்வு நடைபெற்றது. இதன்போது, கோப் குழுவுக்கு சுயாதீன தரப்பினரின் உறுப்பினர்கள் நியமிக்கப்படாதமை குறித்து சுயாதீன தரப்பினர் அதிருப்தி வெளியிட்டனர்.

விசேட கூற்றை முன்வைத்து உரையாற்

15

## மாணவர்களின் ஆர்ப்பாட்டம் நேற்றும் கலைக்கப்பட்டது!

### கண்ணீர்புகை, நீர்த் தாரை பிரயோகம்!




கொழும்பு, ஒக். 05

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று மாணவர்களையும் விடுவிக்க வலியுறுத்தியும் அரச அடக்குமுறைகளை கண்டித்தும் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் நேற்றும்

15

## கொத்து, உணவுபொதி, பால்மா விலை உயர்வு!

கொழும்பு, ஒக். 05

கொத்துரொட்டி, பிறைட் ரைஸ், உணவுப் பொதி என்பவற்றின் விலை 10 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, பால் மாவின் விலையும் 100, 230 ரூபாய்களால் உயர்வடைகின்றன.

சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி மற்றும் பொருட்களின் விலை அதிகரிப் பால் உணவு வகைகளின் விலை உயர்த்தப்பட்டதாக இலங்கை உணவக உரிமையாளர் சங்கத்

15

## பொருளாதார நெருக்கடியையும் மனித உரிமைக்குள் உள்ளடக்குக!

### சர்வதேச மன்னிப்பு சபை சொல்கிறது

புதுடில்லி, ஒக். 05

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை மனித உரிமைகளுக்குள் முழுமையாக இணைக்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

இலங்கை அதிகாரிகளுக்கும் சர்வதேச சமூகத்தினருக்கும் இதனைக் கோரிக்கையாக அந்த அமைப்பு விடுத்துள்ளது.

கடந்த ஜூன் - செப்ரெம்பருக்கு இடையில் சர்வதேச மன்னிப்பு சபை ஆபத்தான வேலையில் உள்ளவர்கள், தினசரி கூலித் தொழிலாளர்கள், மீன்பிடித்துறை,

15

## ஆர்ப்பாட்ட - வன்முறைகளை தடுப்பதற்கு புதிய சட்டங்கள்!

### அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டது

கொழும்பு, ஒக். 05

ஆர்ப்பாட்டங்கள் என்ற போர்வையில் நடைபெறும் வன்முறைகளை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என்று அமைச்சரவை

15

## தீவுகளை அபிவிருத்தி செய்ய புதிய அதிகார சபை அறிமுகம்!

கொழும்பு, ஒக். 05

நாடெங்கிலும் உள்ள தீவுக் கூட்டத்தை அபிவிருத்தி செய்து நாட்டின் பொருளாதாரத்தை வினைத்திறனாகப் பயன்படுத்தும் நோக்கில், “இலங்கை தீவுகள் அபிவிருத்தி அதிகார சபை“ என்ற புதிய நிறுவனம் நிறுவப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பங்காளிக் கட்சிகள் மூன்றுக்கும் இடையே எப்போதும் ஒரு முறுகல்நிலை இருந்துகொண்டே இருக்கின்றது என்பது இரகசியமானதல்ல.

அந்த மூன்று கட்சிகளுக்குள்ளும் தமிழ் அரசுக் கட்சி எப்போதும் தன்னையே முதன்மைப்படுத்திப் பார்ப்பதும் தமது சின்னத்திலேயே தேர்தல்களில் போட்டியிடுவதால் ஒரு நாட்டாமை பாத்திரத்தை வகிப்பதும் தெரிந்தவைதான்.

அதிலும் குறிப்பாக ஒருசிலர் தம் விருப்பப்படி நடந்துகொள்வதும் தங்களையே கட்சிக்குள் முதன்மைப்படுத்தி செயல்படுவதும் கட்சிக்கே பெரிய பின்னடைவுகளை கொண்டுவந்து சேர்த்ததும்கூட தெரிந்ததுதான்.

எந்த விடயங்களிலும் ஒருசிலர் தன்னிச்சையாக முடிவெடுப்பதும் தமது சொந்த விருப்பத்தையே கட்சியின் முடிவாகத் திணிக்க நினைப்பதும்தான் கட்சியை இன்று, இருபத்தி இரண்டு எம். பிக்களிலிருந்து பத்துக்கு கொண்டுவந்து சேர்த்திருக்கின்றது. அடுத்த தேர்தலில் அது இன்னமும் குறைவதற்கே சந்தர்ப்பம் இருக்கின்றது என்பதும் தெரிந்ததுதான்.

முதலில், சுரேஷ் பிறேமச்சந்திரன் கூட்டமைப்பிலிருந்து வெளியே வருவதற்கும் அவரைத் தொடர்ந்து விக்னேஸ்வரன் தனிக்கட்சி தொடங்குவதற்கும் அந்த ஒருசிலரின் நடவடிக்கைகள்தான் காரணம் என்பது பற்றியும் பல தடவைகள் இந்தப் பத்தியில் எழுதியாகிவிட்டது.

இப்போது, அந்த விடயங்களை எல்லாம் சுட்டிக்காட்டியுள்ள தமிழ் மக்கள் கூட்டணித் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன், தமது கட்சியில் வந்து இணையுமாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் வேறுகட்சிகள் சேர்ந்து தேர்தலை சந்திக்கும் பட்சத்தில் அவர்களின் கோரிக்கையைப் பொறுத்து 'மீன்' சின்னத்துக்கு பதில் 'மான்' சின்னத்தில் போட்டியிட வாய்ப்பு உண்டு என்றும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று சிதையத் தொடங்கியுள்ளது. கூட்டமைப்பின் பலமும் ஒருமைப்பாடும் ஒரு சிலரின் அபசுர நடவடிக்கைகள் காரணமாகப் பாதிப்படையத் தொடங்கியது. நான் வெளியேறியதும் அந்த அபசுரத்தைச் சகிக்க முடியாமல்தான்' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கடந்த தேர்தலில் அவர் தனிக்கட்சி தொடங்கியிருந்த போதிலும் அது தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால், ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் பெயரை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்று பெயரை மாற்றிவிட்டு, அதன் மூலம் கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்தித்திருந்தார். அதன் உத்தியோகபூர்வ சின்னமான மீன் சின்னத்திலேயே தேர்தலை சந்தித்து ஓர் ஆசனத்தைப் பெற்று எம். பியாகவும் இருக்கின்றார்.

அந்தக் கூட்டணியில் பதிவுசெய்யப்படாத அவரின் கட்சி மாத்திரமன்றி, சிறீகாந்தா- சிவாஜிலிங்கத்தின் தமிழ்த் தேசியக் கட்சியும் அனந்தி சசிதரனின் ஈழத் தமிழர் சுயாட்சி கழகமும் கூட்டணி அமைத்திருந்தன. அவையும் பதிவுசெய்யப்படாத கட்சிகள்தான்.

இப்போது விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி தேர்தல் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டு அதற்கென மான் சின்னமும் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

இப்போது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் வேறு கட்சிகள் சேர்ந்து தேர்தலைச் சந்திக்கும் பட்சத்தில் அவ்வாறு புதிதாக சேருபவர்கள் விரும்பினால், மீன் சின்னத்துக்குப் பதிலாக தனது மான் சின்னத்தில் போட்டியிடுவதற்கும் வாய்ப்பு உண்டு என்றே அவர் இப்போது அறிவித்திருக்கிறார்.

அவரின் இந்த அறிவிப்பு எதற்காக திடீரென்று விடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை. வேறு கட்சிகள் என்று அவர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்?

கூட்டமைப்பில் இருக்கும் மூன்று கட்சிகளும் கூட்டமைப்பிலிருந்து வெளியே வருவதற்கான எந்த சமிக்ஞையையும் காணவில்லை. தமிழ் அரசில் சிலர்- குறிப்பாக சிறீதரன் மாத்திரமே பொதுவெளியில் தனித்துப் போட்டியிடுவது பற்றி கூறியிருக்கிறார். அவ்வாறு தமிழ் அரசு வெளியேறி தனித்துப் போட்டியிடும் நிலை வந்தால், மற்ற இரு கட்சிகளுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் இயங்குவதற்கு சட்டபூர்வமான தகுதியைப் பெற்றுவிடும்.

இந்நிலையிலேயே, அண்மையில் கூடிய தமிழ் அரசின் மத்தியகுழு பங்காளிக் கட்சிகளுடனுள்ள சிறிய சிறிய பிணக்குகளை பேசி சரிசெய்துகொண்டு கூட்டமைப்பாக தொடர்வதற்கே விருப்பம் தெரிவித்திருக்கின்றது. அப்படியொரு நிலையில் அந்த மூன்று கட்சிகளும் தொடர்ந்து பயணிக்கவே சந்தர்ப்பம் உண்டு.

அப்போ, விக்னேஸ்வரன் யாரை அழைக்கிறார்? எஞ்சியிருப்பது தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் ஒன்றுதான். அவர்கள் இந்தக் கூட்டணியில் வந்தால் சின்னத்தை மாற்றி போட்டியிடவும் தயார் என்கிறாரா?

கூட்டமைப்பு இப்போது சிதைவடையத் தொடங்கியிருக்கின்றது என்று குறிப்பிடும் அவர், ஒருசிலரின் அபசுர நடவடிக்கைகள்தான் அதற்கு காரணம் என்கிறார். ஆனால், தனது கட்சிக்குள்ளும் அருந்தவபாலன் போன்ற முக்கிய பிரமுகர்களே அவர்மீதும் அப்படியொரு குற்றச்சாட்டை சுமத்திவரும் நிலையில் அவர் மற்றவர்கள் மீது குற்றம் சுமத்துவதை எப்படி ஜீரணிப்பது?

**- ஊர்க்குருவி**

# யாழ். நகர பகுதிகளில் கலாசார சீரழிவு; பிரதிமுதல்வர் குழுவினர் கண்காணிப்பு

*யாழ்ப்பாணம், ஒக். 05*

யாழ். நகரை அண்மித்த பண்ணை பூங்கா, கோட்டை பகுதிகளில் கலாசார சீரழிவுகளில் ஈடுபடுவோரை எச்சரித்து அனுப்பினர் மாநகர பிரதி முதல்வர் து. ஈசன் தலைமையிலான மாநகர சபை உறுப்பினர்கள்.

இதன்போது, பாடசாலை மாணவர்கள் சிலரும் இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றமை அவதானிக்கப்பட்டதாகவும், நகரப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் இது விடயத்தில் அவதானத்துடனும் விழிப்புடனும் செயல்படுமாறு பிரதி முதல்வர் ஈசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேசமயம், பொதுமக்கள், சிறுவர்கள் அதிகம் வந்து செல்லும் பண்ணை பூங்கா பகுதியில் பாலியல் ரீதியான செயல்பாட்டில் ஈடுபட்ட 40 வயது மதிக்கதக்க இருவரை நேற்று முன்தினம் அந்தப் பகுதிக்கு சென்ற பிரதி முதல்வரும், அவருடன் சென்ற குழுவினரும் கடுமையாக எச்சரித்து அங்கிருந்து செல்லுமாறும் அறிவுறுத்தினர்.

இதன்போது, அநாகரிக செயல்பாட்டில் ஈடுபட்ட ஆண் தனக்கு கொழும்பில் பொலிஸில் ஆள் உள்ளதாகக் கூறி பிரதி முதல்வர் தலைமையிலான குழுவினரை மிரட்டும் பாணியில் முரண்பட்டார்.

இந்த விடயங்கள் தொடர்பில் பிரதி முதல்வர் கூறுகையில்,

யாழ். மாநகர சபை பிரதி முதல்வர் என்ற வகையில் தொடர்ச்சியாக எனக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைவாகவும், பொதுமக்கள் மற்றும் பத்திரிகைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் அடிப்படையிலும் நேற்று (நேற்று முன்தினம்) யாழ்ப்பாணம் கோட்டை, அதனை அண்டிய பகுதிகளான கடற்கரைப் பூங்கா அதாவது பண்ணைப் பூங்கா, ஆரியகுளம், புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடம், யாழ்ப்பாணம் கோட்டையை அண்டியதாக வெளிப்புறத்திலுள்ள சுற்றுச்சூழல்கள், ரெலிக்கொம் சுற்றுப்புறச் சூழல்கள் எல்லாம் எனது தலைமையில் மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை பணியாளர்களும், சல்லடை போட்டு தேடினோம்.

இதன்போது பலர் சோடிகளாக அங்கிருந்தமையை அவதானிக்க முடிந்தது. இதைவிட, இளைஞர்கள், மதுபானம் அருந்துதல் மற்றும் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டமையும் அவதானிக்க முடிந்தது. எம்மைக் கண்டவுடன் அவர்கள் அவ்விடத்தை விட்டு சென்றுவிட்டனர்.

அத்தோடு, முனியப்பர் கோவிடியால் செல்கின்ற பாதை மற்றும் முனியப்பர் கோவிலுக்கு வடக்காக உள்ள பாதையிலும் இளைஞர்கள் அதிகளவில் கூடுவதையும், போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுதல், பெண்களைக் கூட்டிச்சென்று அநாகரிகமான செயல்பாடுகளில் ஈடுபடுவதையும் எங்களால் அவதானிக்க முடிந்தது. அந்தப் பகுதிகளில் உள்ளாடைகள் இருந்ததைக் கூட எங்களால் அவதானிக்க முடிந்தது.

காலை 8. 30 மணியளவில் சுற்றிவளைப்பு நடவடிக்கையை ஆரம்பித்து பிற்பகல் 2. 30 மணி வரை அந்தப் பணியை முன்னெடுத்திருந்தோம். இதன்போது, பாடசாலை மாணவர்களும் இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடுவதையும் எங்களால் அவதானிக்க முடிந்தது.

யாழ்ப்பாணத்துக்கு படிப்பதற்காக பெற்றோர் பிள்ளைகளை அனுப்பி வைக்கின்றனர். தூர இடங்களில் இருந்தும் பலர் யாழ்ப்பாணம் நகரத்திலுள்ள பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்கு கல்வி கற்க வருகின்றனர். எங்களை நம்பியே பெற்றோர் தங்கள் பிள்ளைகளை யாழ்ப்பாணம் நகரத்துக்கு அனுப்பி வைக்கின்றனர். அவர்களின் எதிர்காலத்துக்கு நாங்களும் பொறுப்புக் கூற வேண்டியவர்கள்தான். அந்த அடிப்படையிலேயே பாடசாலை மாணவிகள், மாணவர்கள் இவ்வாறான பாலியல் மற்றும் போதைப்பொருள் பாவனை உள்ளிட்ட சமூகச் சீரழிவான செயல்பாடுகளில் ஈடுபடுவதை தடுக்க முற்பட்டோம்.

எனினும், யாழ்ப்பாண நகரத்துக்கு கல்வி கற்க வரும் பாடசாலை சிறார்கள் குறிப்பாக பெண் பிள்ளைகள் தொடர்பில் பெற்றோர் விழிப்பாக இருப்பதோடு, அவர்களின் செயல்பாடுகளை கண்காணித்து சமூக சீரழிவுகளைத் தடுத்து நிறுத்த யாழ். மாநகர சபைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (ஐ)



## பூர்வீகக் காணிகள், குளத்தை பாதுகாப்பது குறித்து ஆராய்வு

*அம்பாறை, ஒக். 05*

இறக்காமம் பிரதேசத்தில் உள்ள பூர்வீக நிலங்கள் மற்றும் பாரம்பரிய வரலாற்று தொன்மைவாய்ந்த குளத்தின் கரையோரப் பகுதிகள் மிக நீண்ட காலமாக மிக நுணுக்கமான முறையில் பல தரப்பினராலும் ஆக்கிரமிக்கப்பட்டு கபளீகரம் செய்யப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் அரசியல்வாதிகளிடமும் அரச நிர்வாகத்தினரிடமும் பல்வேறு முறைப்பாடுகள் செய்யப்பட்டும் ஆக்கபூர்வமான எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இறக்காமம் நன்னீர் மீனவ சங்கமும், இறக்கமாம் கால்நடை பண்ணையாளர் சங்கம், விவசாயக் குழு என்பன இணைந்து மேற்படி ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு எதிராக அம்பாறை மேல்நீதிமன்றத் தில் வழக்கு தாக்கல் செய் துள்ளன.

எனவே இது விடயம் தொடர்பாக சிவில் சமூகப் பிரதிநிதிகளை தெளிவூட்டல் அமர்வும் எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலும் இறக்காமம் 1-9 நன்னீர் மீனவச் சங்கத்தின் தலைவர் என். நிஸ்வி தலைமையில் இறக்காமம் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு இறக்காமம் பிரதேச சபை தவிசாளர் எம்.எஸ்.ஜமீல் காரியப்பர், உதவி தவிசாளர் மௌலவி ஏ. எல்.நௌபர், முன்னாள் தவிசாளர் ஜே.கே.ரஹ்மான், பிரதேச சபை உறுப்பினர் எம். எல். முஸ்மி ஆகியோருடன் இணைந்து இறக்காமம் பிரதான பள்ளிவாசல் தலைவர்கள், பிரதேச ஜம்மியதுல் உலமா சபையினர், கால்நடை பண்ணையாளர் சங்க உறுப்பினர்கள், நன்னீர் மீனவ சங்க உறுப்பினர்கள், இளைஞர் கழக சம்மேளனம், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ)

## ஓய்வூதிய வயதை திருத்த அனுமதி

*கொழும்பு, ஒக்.05*

அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதை 60 ஆக மாற்றியமைக்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இடைக்கால பாதீட்டின்போது கட்டாய ஓய்வு வயது 60 ஆக அறிவிக்கப்பட்டது

அதற்கமைய, 2023.01.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அதற்கான ஒழுங்குவிதிகளை விதித்து ஏற்புடைய சுற்றறிக்கை ஆலோசனைகளை வெளியிடுவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
05.10.2022 புதன்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அரசியல் சுடலை ஞானம்?

வாழ்வில் அனைத்தையும் செய்துவிட்டு இறுதிக் காலத்தில் அவற்றை எண்ணி வருந்துவதையே பொதுவாக சுடலை ஞானம் என்பார்கள். ராஜ பக்ஷக்களின் கூடாரத்தில் அங்கம் வகித்த திஸ்ஸ விதாரண தற்போது பயங்கரவாதச் தடைச் சட்டம் தொடர்பில் கவலை தெரிவித்திருக்கின்றார். அன்று தமிழ் மக்களை அழிக்கப் பயன்பட்ட பயங்கரவாதச் தடைச் சட்டம் இன்றோ தென்னிலங்கையில் அரசியல் எதிரிகளை அடக்குவதற்கு பயன்படுவதாக குறிப்பிட்டிருக்கின்றார்.

திஸ்ஸ விதாரண இடதுசாரியாக அடையாளம் காணப்படும் ஒருவர். தற்போது, ராஜபக்ஷக்களுக்கு எதிரான விமல் வீரவன்ஸ - உதய கம்மன்பில அணியோடு, இணைந்து செயல்படுகின்றார். மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் அங்கத்துவம் வகித்து அமைச்சரவையிலும் இடம்பெற்றவர். ராஜபக்ஷ க்களோடு இணைந்திருந்தபோது, தமிழ் மக்களின் நியாயங்களுக்காக இவர் குரல் கொடுக்கவில்லை. அப்போது தனது பதவி நிலையை பாதுகாத்துக் கொண்டு ராஜபக்ஷக்களின் அனைத்து வகையான அரசியல் செயல்பாடு களுக்கும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தார். வாசுதேவ நாணயக்காரவின் அரசியல் செயல்பாடுகளும் இதே போன்றதுதான். இடதுசாரியாக தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் வாசுதேவ நாணயக்கார, இன்றுவரையில் சிங்கள கடும்போக்குவாதிகளோடு இணைந்தே பயணம் செய்கின்றார்.

சிங்கள முற்போக்கு சக்திகளுடன் தமிழ்த் தேசிய தரப்புக்கள் இணைந்து செயல்படவில்லை. - சிங்கள மக்களுக்கு தமிழ் மக்களின் பிரச்னைகளை தெளிவுபடுத்தி அவர்களின் ஆதரவைப் பெறுவதற்கு தமிழ்த் தேசிய தரப்புக்கள் முயற்சிக்கவில்லை. இப்படியான அபிப்பிராயங்களை இப்போதும் ஆங்காங்கே காண முடிகின்றது. ஆனால், யார் அந்த சிங்கள முற்போக்கு சக்திகள்? ஒரு விடயம் நகைச்சுவையாக சொல்லப்படுவதுண்டு. அதாவது, தென்னிலங்கையின் முற்போக்குவாதிகள் அனைவரையும் ஒரு முச்சக்கர வண்டியில் ஏற்றிவிடலாம் - ஏனெனில், அந்தளவுக்குத்தான் முற்போக் காளர்கள் தென்னிலங்கையில் இருக்கின்றனர்.

ஏனெனில், சிங்கள - பௌத்த கட்டமைப்பைக் கேள்விக்கு உள்ளாக் கும் சிந்தனையோடு வெளியில் வரக்கூடியவர்கள் மிகவும் சொற்பமான வர்கள்தான். அவர்களும் சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கு உள்ள வர்கள் அல்லர். சிங்கள மக்கள் மத்தியில் தமிழ்த் தேசிய தரப்புக்கள் நேரடி யாக பணியாற்ற முடியாது. தமிழ் மக்களின் நியாயத்தை ஏற்றுக் கொண்ட சிங்கள தரப்புக்கள்தான் அந்தப் பணியை செய்ய வேண்டும். ஆனால், அதை யார் செய்வது? இந்தக் கேள்விக்கான பதிலாக அமைந்தவர்கள்தான் - சிங்கள இடதுசாரிகளாவர். ஆனால், அவர்களும் இறுதியில் சிங்கள - பௌத்த இனவாத சகதிக்குள்தான் வீழ்ந்தனர்.

இந்த விடயத்தில், முன்னைய உதாரணங்களாக கொல்வின் ஆர். டி சில்வா, என். எம். பெரேரா போன்றவர்களை குறிப்பிட முடியுமென்றால், பிந்திய உதாரணங்களாக, திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார போன்றவர்களை குறிப்பிடலாம். உண்மையில் இவர்கள் எவருமே ராஜ பக்ஷக்களின் வெற்றிக்கு தேவைப்பட்டிருக்கவில்லை. ஏனெனில், இவர்கள் எவருமே, மக்கள் மத்தியில் செல்வாக்குள்ளவர்கள் அல்லர். அவ்வாறாயின் இவர்கள் எதற்காகத் தவறான ராஜபக்ஷக்களோடு இணைந்து செயல்பட் டனர்? ராஜபக்ஷக்கள் தவறானவர்கள் என்பதைத் தெரிந்தும் எதற்காக ராஜபக்ஷக்களின் அமைச்சரவையில் இடம்பெற வேண்டும்? உண்மையில் சிங்கள அரசியல் அதிகார கட்டமைப்புக்குள் தாங்களும் இருக்க வேண்டு மென்று விரும்பியே இவர்கள் ராஜபக்ஷக்களிடம் சரணடைந்தனர். இவர்கள் எவ்வாறு முற்போக்கானவர்களாக இருக்க முடியும்?

உண்மையில் சிங்கள முற்போக்கு சக்திகளோடு இணைந்து செயல்பட வேண்டும். தமிழ் மக்களின் பிரச்னையை சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் - என்றவாறான வாதங்கள் தோல்வியடைந்துவிட்டன. தென்னிலங்கையில் அவ்வாறானவர்கள் இருந்தால் அவர்களுடன் பேசு வதில் தவறில்லை. ஆனால், இதனை தமிழர் தரப்பின் அரசியல் தவறாக கூறுமளவுக்கு இது ஒரு பெறுமதியான விடயமல்ல. இன்றுவரையில் அரசமைப்பில் இருக்கின்ற விடயங்களைக்கூட முழுமையாக அமுல்படுத்து வதற்கு சிங்கள ஆட்சியாளர்கள் தயாராக இல்லை.

# ஆங்கில மொழியில் மட்டுமா இனி சட்டக்கல்லூரி பரீட்சை?

## பாராளுமன்றில் கடும் விவாதம்

*கொழும்பு, ஒக்.05*

*2023ஆம் ஆண்டுக்குப் பின்னர் சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்று வெளியிட்டுள்ள வர்த்தமானியை மீள்பரிசீலனை செய்ய பிரதம நீதியரசரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளதால் தமிழ், சிங்கள மாணவர்களின் அடிப்படை உரிமைக் குப் பாதிப்பு ஏற்படாது என்று நீதி, சிறைச் சாலைகள் விவகாரம் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.*

*பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினாக் களின் போது ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. புத்திக பத்திரன எழுப்பிய கேள்விக்குப் பதில ளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த அமைச் சர் விஜயதாஸ ராஜபக்ஷ, மேலும் கூறுகையில்,*

*“சிங்களம் மற்றும் தமிழ் மாணவர்கள் தங்களின் தாய்மொழியில் சட்டப் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்ய உரிமையுண்டு. வெளி நாட்டில் ஆங்கில மொழியில் சட்டப் படிப்பைப் பூர்த்தி செய்த ஒருவர் சட்டத் தொழிற்துறையில் ஈடுபடுவதற்கும், சிங்களம் அல்லது தமிழ் மொழியில் சட்டத் தொழிற் துறையில் ஈடுபடுபவர்களுக்கும் தொழிற் துறை ரீதியில் ஒருசில சிக்கல்கள் காணப்படு கின்றன*

*சட்டக் கல்லூரி பரீட்சையை ஆங்கில மொழியில் மாத்திரம் தோற்றும் வகையிலான வர்த்தமானி 2013ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது.*

*இந்தத் தீர்மானத்துக்கு சமூக மட்டத்தில் எதிர்ப்பு எழுந்ததைத் தொடர்ந்து 2015ஆம் ஆண்டு அந்தத் தீர்மானம் மாற்றியமைக்கப் பட்டு, மாணவர்கள் தமது தாய்மொழியில் பரீட் சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட்டது.*

*இவ்வாறான நிலையில், 2023ஆம் ஆண்டுக்குப் பின்னர் சட்டக்கல்லூரியின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு பரீட்சைகளுக்கு ஆங்கில மொழியில் மாத்திரம் தோற்ற வேண்டும் என்ற விசேட வர்த்தமானி கடந்த 2020 ஆம் ஆண்டு வெளி யிடப்பட்டது. இந்தத் தீர்மானம் தொடர்பில் மாணவர்கள் முறைப்பாடு அளித்துள்ளார்கள்.*

*இதையடுத்து இந்த வர்த்தமானி தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ள பிரதம நீதியரசரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானியை மீள்பரிசீலனை செய்ய ஆலோசனை கோரப் பட்டுள்ளது. எனவே, தமிழ் மற்றும் சிங்கள மாணவர்களின் அடிப்படை உரிமைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது” - என்றார்.*

*இதன்போது எழுந்த அரச கரும மொழிகள் முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார,*

*“தமிழ் மற்றும் சிங்கள மொழி இந்த நாட் டின் அரச கரும மொழிகள். ஆங்கில மொழி தொடர்பு மொழி.*

*இந்த நாட்டு மாணவர்கள் ஆங்கில மொழி யில் மாத்திரம் சட்டக் கல்லூரி பரீட்சையைத் தோற்ற வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளமை அரசமைப்புக்கு முரணானது.*

*உயர் வர்க்கத்தின் தேவைக்கமையவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது” - என்றார்.*

*இதன்போது எழுந்து உரையாற்றிய முன் னாள் கல்வி அமைச்சரும் தற்போதைய போக்கு வரத்து அமைச்சருமான பந்துல குணவர்த்தன,*

*“ஒரு பிள்ளை தமது ஆரம்பக் கல்வியைத் தமது தாய் மொழியில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற யுனெஸ்கோ நிறுவனத்தின் கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.*

*தமிழ் மற்றும் சிங்கள மாணவர்கள் தமது தாய்மொழியில் பட்டப் படிப்பைத் தொடர உரிமையுண்டு.*

*அதற்குத் தடையேற்படுமாயின் அது அடிப்படை உரிமை மீறல். இவ்விடயம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் கூற்றை நானும் ஏற்கின் றேன்” - என்றார்.(அ)*

# நாகதம்பிரான் ஆலய திருவிழா ஆரம்பம்!

*வடமராட்சி, ஒக். 05*

*வரலாற்று சிறப்புமிக்க நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய அலங்கார திரு விழா நேற்று செவ்வாய்க்கிழமை சிவாச்சாரி யார் கலாதர் குருக்கள் தலைமையில் ஆரம்பமானது.*


*கிரியைகள் இடம்பெற்று வசந்த மண்டப சிறப்பு பூசைகள் இடம்பெற்று நாகதம்பிரான் உள்வீதி வலம் வந்தார்.*

*தொடர்ந்து பதினொரு தினங்கள் இடம் பெறவுள்ள அலங்கார திருவிழாவில் ஆறாம் திருவிழாவான எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பாம்புத் திருவிழாவும் மறுநாள் ஏழாம் திரு விழா திங்கட்கிழமை கப்பல் திருவிழாவும், 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத்*



*திருவிழாவும், 12ஆம் திகதி புதன்கிழமை சப்பைரதத் திருவிழாவும், 13 ஆம் திகதி வியாழக்கிழமை கப்பல் திருவிழாவும், 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை சமுத்திர தீர்த்தத் தீருவிழாவும் அன்று பிற்பகல் பட்டு தீர்த் தமும் இடம்பெறவுள்ளன. (ஐ-2)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



## இன்றைய ராசிபலன்

ஒக்ரோபர் - 05 புதன்கிழமை
சுபகிருது வருடம் - புரட்டாதி 18
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : ஏகாதசி



**மேடம்:** மற்றவர்களால் செய்ய முடியாத ஒரு செயலை இன்று செய்து முடிப்பீர்கள்.தொழிலில் ஏற்பட்ட தடைகளை சரிசெய்வீர்கள். வருவாய் அதிகரிக்கும். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**இடபம்:** நீங்கள் எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். உற்சாகம் அதிகரிக்கும். குடும்ப பிரச்னைகளை சரி செய்வீர்கள். வியாபாரத்தில் உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். செல்வாக்கு அதிகரிக்கும்.

**மிதுனம்:** செயலில் கவனம் தேவை. சங்கடங்கள் உண்டாகும். எதிர்பார்த்த முயற்சி ஒன்று நிறைவேறாமல் போகும். பேச்சில் நிதானம் தேவை. சக ஊழியர்கள் உங்களுக்கு எதிராகலாம். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**கடகம்:** விரும்பியதை அடைவீர்கள். சிலருக்கு புதிய வேலை கிடைக்கும். உங்கள் முயற்சி ஒன்று வெற்றியாகும். எதிர்பாராத ஆதாயம் வந்து சேரும். நிதிநிலை உயரும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**சிம்மம்:** வெளி வட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். பகைவர்கள் விலகிச் செல்வார்கள். எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். அரசு வழியிலான முயற்சி நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி:** எதிர்பார்த்த வரவு உண்டு. குடும்பத்திற்காக சேமிப்பை ஏற்படுத்துவீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். கடன்களை அடைப்பீர்கள். உறவினர்களின் ஆதரவுடன் குடும்பத்தில் நன்மைகள் உண்டாகும்.

**துலாம்:** அலைச்சல் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு ஒன்றில் பின்னடைவு உண்டாகும். தாயாரின் உடல் நிலையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டி வரும். பண வரவில் தடையுண்டாகும்.

**விருட்சிகம்:** உங்கள் முயற்சி வெற்றியாகும்.அரசு வழியிலான செயலில் நீங்கள் எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள். பணியிடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். வருமானத்தில் இருந்த தடை விலகும்.

**தனுசு:** பணியிடத்தில் உங்கள் உழைப்பை மற்றவர்கள் பாராட்டுவர். நினைத்ததை அடைவீர்கள். எதிர்காலம் குறித்த சிந்தனை அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சி மேற்கொள்வீர்கள்.

**மகரம்:** வேலைப்பளு அதிகரிக்கும். செயல்களில் கவனம் அவசியம். மற்றவர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகும். குடும்பத்தினருடன் மனஸ்தாபம் ஏற்படும். நீங்கள் எதிர்பார்த்த வரவு தாமதமாகும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் இன்று வேண்டாம். வழக்கமான செயல்களும் இழுபறியாகும்.அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் காண முடியாது. நீங்கள் நினைத்த செயல் ஒன்று இழுபறியாகும்.

**மீனம்:** மற்றவர் விரும்பும் வகையில் உங்கள் செயல்பாடுகள் இருக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.செல்வாக்கு அதிகரிக்கும். நீங்கள் நினைத்தவை நடந்தேறும். வருமானம் கூடும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

# இலங்கையின் போர்க் குற்றவிசாரணை இந்தியாவில் நடத்தும் தீர்மானம் தேவை!

## பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்து

*சென்னை, ஒக். 05*

இலங்கை போர்க்குற்ற விசாரணையை இந்தியாவில் நடத்துவதற்கான தீர்மானத்தை ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நமது நாடு ஆதரிக்க வேண்டும் என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

“இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்த வரைவுத் தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட 10 நாடுகள் கொண்டு வந்துள்ளன. ஈழப் போரில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களின் குடும்பங்களுக்கு நீதி வழங்கும் நடவடிக்கைகளுக்கு வலு சேர்க்கும் வகையிலான இந்த வரைவுத் தீர்மானம் வரவேற்கத்தக்கதாகும்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ. நா. மனித உரிமை பேரவையின் 51ஆவது கூட்டத்தில், 16 நாடுகளும் இணைந்து வரைவுத் தீர்மானத்தை தாக்கல் செய்துள்ளன. தீர்மானத்தில் மொத்தம் 19 அம்சங்கள் இடங்கள் பெற்றுள்ளன. முதல் இரு பத்திகளில் போர்க் குற்றங்கள் தொடர்பான விவகாரத்தில் ஐ.நா. மனித உரிமை ஆணையம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை வரவேற்றுள்ள வரைவு தீர்மானம், அடுத்த 5 பத்திகளில் போர்க்குற்ற விசாரணை குறித்த இலங்கையின் நிலையை விமர்சித்துள்ளது.

மீதமுள்ள 12 பத்திகளில் போர்க்குற்ற விசாரணையை முன்னெடுத்து செல்வது, இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவது உள்ளிட்ட அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. இலங்கை போர்க்குற்றம் குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையம் திரட்டியுள்ள ஆதாரங்களை பாதுகாக்கவும், வலுப்படுத்தவும் ஐ.நா. மனித உரிமை ஆணையத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் இலங்கையில் நடைபெற்ற போர்குற்றங்கள் குறித்து, இந்தியா உள்ளிட்ட உறுப்பு நாடுகளில் உரிய அதிகார வரம்பு கொண்ட அமைப்பால் நீதித்துறை விசாரணை மற்றும் பிற நடைமுறைகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் வரைவுத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. போர்க்குற்ற விசாரணையை அடுத்த நிலைக்கு எடுத்து செல்வதற்கு இது உதவும்.

இத்தகைய சிறப்பு மிக்க தீர்மானம் நிறைவேற்றப் படுவதை உறுதி செய்ய வேண்டிய கடமையும், பொறுப்பும் இந்தியாவுக்கு உண்டு.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் நடப்புக் கூட்டத்தில் கடந்த செப்ரெம்பர் 12ஆம் தேதி உரையாற்றிய இந்திய தூதர், இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு அதிகாரம் வழங்கப்படாததை சுட்டிக்காட்டியதுடன், ஒருங்கிணைந்த இலங்கைக்குள் தமிழர்களுக்கு நீதி, அமைதி, சமத்துவம் மற்றும் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும் என்பது தான் இந்தியாவின் நிலைப்பாடு இதை இலங்கை உறுதி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இந்தியாவின் இந்த நிலைப்பாடு வரவேற்கத்தக்கது.

ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்பதற்காக ஐ.நா. மனித உரிமை பேரவையில் குரல் கொடுத்த இந்தியா, ஈழத்தமிழர் படுகொலைகளுக்கு நீதி பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளுக்கும் ஆதரவு அளிக்க வேண்டும். அதற்காக ஐ. நா. மனித உரிமை பேரவையில் நாளை மறுநாள் ஒக்ரோபர் 6-ஆம் தேதி நடைபெறவுள்ள வாக்கெடுப்பில், இலங்கை போர்க்குற்றம் தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களிக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.” - என்றுள்ளது. (ஐ)

# தமிழர் வாழ்வு செழித்திட தொடர்ந்து பாடுபடுவோம்!

## முதல்வர் ஸ்டாலின்

*சென்னை, ஒக். 05*

தமிழர்களின் வாழ்வு செழித்திட தொடர்ந்து பாடுபடுவோம் என்று முதல்வரும் தி. மு. க. தலைவருமான மு. க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுகுறித்து, அவர் கட்சியினருக்கு எழுதியுள்ள கடிதம்

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் தி.மு.க. வின் சிறப்பான பங்களிப்பை இந்தியாவே எதிர்பார்த்திருக்கிறது. தி. மு. க. ஆட்சியில் தமிழ்நாடு பெற்றுவரும் வளர்ச்சியையும் வலிமையையும் சற்றும் பொறுத்துக் கொள்ள முடியாத சில பிற்போக்கு சக்திகள், உட்கட்சியில் நடத்தப்பட்ட தேர்தல்கள் குறித்து, தங்கள் கற்பனை எல்லையைக் காட்டும் வகையில் மட்டரகமான வேலையில் ஈடுபட்டு வருகின்றன.இவற்றையெல்லாம் கடந்துதான் திராவிட இயக்கம் நூற்றாண்டு காலமாக இந்த மண்ணில் ஓயாது பாடுபட்டு, மக்கள் மனதில் மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் உருவாக்கி வருகிறது.

‘எல்லோர்க்கும் எல்லாம்’ என்ற திராவிட மாடல் நல்லரசை வழங்கி வருகிறது. கடைக்கோடி மனிதர்களுக்கும், கடைசி குக்கிராமத்துக்கும் அரசின் திட்டங்கள் சிந்தாமல் சிதறாமல் சென்று சேர வேண்டும் என்கிற சிந்தையுடனும் முனைப்புடனும் முழுமையான அர்ப்பணிப்புடனும் நமது அரசு ஒவ்வொரு நொடியும் செயல்பட்டு வருகிறது. இதற்கு எப்படியாவது ஊறு விளைவித்திட வேண்டும் என நினைப்போரை சரியாக அடையாளம் கண்டு நாம் எச்சரிக்கையுடனும் கவனத்துடனும் செயலாற்றிட வேண்டும் - என்றார். (ஐ)

# ஹிந்தி திணிப்புக்கு எதிராக நாளை கண்டன ஆர்ப்பாட்டம்!

*சென்னை, ஒக். 05*

ஹிந்தி திணிப்பைக் கண்டித்து, ம. தி. மு. க. சார்பில் நாளை வியாழக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை:

அமித்ஷாவின் ஹிந்தி வெறிப் பேச்சுக்குக் கண்டனம் தெரிவிக்கவும், அரசமைப்புச் சட்டத்தின் 8ஆவது அட்டவணையில் உள்ள 22 மொழிகளையும் ஹிந்திக்கு இணையான மத்திய அரசின் அலுவல் மொழியாக அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும், சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு என்னுடைய தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். தமிழ் உணர்வாளர்களும், ம. தி. மு. கவினரும் பங்கேற்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

(ஐ)

# பொருளாதார சவால்களை இலங்கை மக்கள் வெல்வர்!

## ஐஸ்லாந்து ஜனாதிபதி நம்பிக்கை



கொழும்பு, ஒக். 05

**சமூக ஒற்றுமைக்கு குந்தகம் ஏற்படாத வகையில் இலங்கை மக்கள் பொருளாதார சவால்களை மிகவும் வெற்றிகரமாக கையாள்வார்களென ஐஸ்லாந்து ஜனாதிபதி கௌனி ஜொகான்ஸன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

இதேவேளை இலங்கை - ஐஸ்லாந்து ஆகிய நாடுகளுக்கிடையிலான நட்புறவு மேலும் பலப்படுத்தப்படுமென்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில் ஐஸ்லாந்து ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ள செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலுள்ள நட்புறவை தற்போது மக்கள் அனுபவித்து வருகின்றனர். இந்த உறவு எதிர்காலத்தில் இலங்கைக்கும் ஐஸ்லாந்துக்கும் மேலும் பல நன்மைகளை தரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையை பாதித்துள்ள உயர் பணவீக்கம் பற்றி தனது கருத்தை வெளியிட்ட அவர், ஐஸ்லாந்துக்கும் அது பற்றிய சிறந்த அனுபவம் இருப்பதனால் அது இரு நாடுகளுக்குமான பொது பிரச்னை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், அண்மையில் எதிர்நோக்கிய உலகளாவிய தொற்று நோய் மற்றும் சுற்றாடல் அச்சுறுத்தல் ஆகியவற்றின்போது அனைவரும் ஒன்றாக இணைந்து முகம் கொடுக்க வேண்டுமென்றும் அதற்காக ஒவ்வொருவரும் தமது பங்கை மிகச் சிறப்பாக முன்னெடுக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவை மேலும் பலப்படுத்த தனது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்த ஐஸ்லாந்து ஜனாதிபதி, இலங்கை அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் எதிர்காலம் சிறப்பாக அமைய தான் வாழ்த்து தெரிவிப்பதாகவும் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார். (அ)

# கோப் குழுவிலிருந்து ஹர்ஷ திடீர் விலகல்

## வெற்றிடத்துக்குக் ஹேரத்தின் பெயர்

கொழும்பு, ஒக்.05

அரச பொறுப்பு முயற்சிகள் தொடர்பான குழுவின் (கோப்) முன்னாள் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத்தை, புதிய கோப் குழுவில் உறுப்பினராக நியமிக்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்மொழிந்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ,

”கோப் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, கோப் குழுவில் இருந்து விலகுவதற்குச் சுயாதீனமான தீர்மானத்தை எடுத்துள்ளார்.

வெற்றிடத்திற்கு பேராசிரியர் சரித ஹேரத்தை முன்மொழிய எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது” - என்றார்.

பேராசிரியர் சரித ஹேரத்தின் பெயர் அல்லாத 27 பேர் கொண்ட கோப் குழுவை சபாநாயகர் நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.



புதிய கோப் குழு குறித்து கருத்துத் தெரிவித்திருந்த பேராசிரியர் ஹேரத், தனது பெயரை உள்ளடக்காமைக்கு அரசைக் குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரைக் கடுமையாகக் சாட்டியிருந்தார்.

இதேவேளை, ஆளும் தரப்பிலிருந்து வெளியேறிய பாராளுமன்ற உறுப்பினர்கள், கோப் மற்றும் கோபா குழுக்களுக்கு நியமிக்கப்படவில்லை என்று பாராளுமன்றத்தில் நேற்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர். (அ)

# 8000 புதிய ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஒக். 05

அடுத்த வருடத்தின் முதல் பகுதியில் 8,000 ஆசிரியர்களை புதிதாக பாடசாலைகளுக்கு நியமிக்க தீர்மானித்துள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்த அவர், கல்வியியற்கல்லூரிகளில் அதற்கான பரீட்சைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் அதற்கிணங்க அடுத்த வருட ஆரம்ப பகுதியில் 8000 ஆசிரியர்களை புதிதாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, ஆசிரியர் சேவையில் இணைந்து கொள்வதற்கு விருப்பமுடைய அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், பரீட்சை ஒன்றை நடத்தி அதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகளின் அடிப்படையில் மாகாண சபை பாடசாலை ஆசிரியர்களாக அவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அவர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொண்டதன் பின்னர் மூன்று வருடங்களுக்குள் தேசிய கல்வி நிறுவனத்தின் ஒரு வருட டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்வதற்கு சந்தர்ப்பமளித்து பயிற்சி ஆசிரியர்களாக அவர்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (அ)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக ரூ.15,000?

கொழும்பு, ஒக். 05

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு தேயிலைச் சபை ஊடாக வேனும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரணவிடம் கோரிக்கை விடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

இதன்போதே எதிர்க்கட்சித் தலைவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

“தீபாவளி பண்டிகையானது, இந்துக்களுக்கு மிக முக்கிய நிகழ்வாகும். பெருந்தோட்டத் தொழிலாளர்களுள் பெரும்பாலோனார் இந்துக்கள். எனவே, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, அவர்களுக்கு கடந்த காலங்களில், கடன் அடிப்படையில் 5 ரூபா முற்பணம் வழங்கப்பட்டு வந்தது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பணவீக்கம், பொருளாதார சூழ்நிலைக்கு மத்தியில் எந்த விதத்திலும் அந்த கொடுப்பனவு போதுமானதாக இல்லை, எனவே, 15 ஆயிரம் ரூபாவை கடன் அடிப்படையில் வழங்குவதற்கு, தேயிலை சபை தலையிட வேண்டும்.”-என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ரமேஷ் பத்திரண,

இது சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

15 ரூபாவாக வழங்குவதற்கு, தேயிலைச் சபை ஊடாக தலையீடு செய்ய முடியும். கடன்தான் வழங்கப்படுகின்றது. உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தேயிலைச் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

# பேராதனைப் பல்கலைக்கழக மற்றுமொரு மாணவன் மாயம்

கொழும்பு, ஒக்.05

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட மூன்றாம் வருட மாணவர் ஒருவர் காணாமல்போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன் தினம் காலை முதல் குறித்த மாணவர் காணாமல்போயுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகத்தினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கனேமுல்ல பகுதியைச் சேர்ந்த 25 வயதான புலஸ்தி பிரமுதித் பெரேரா என்ற மாணவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருந்த குறித்த மாணவனை கடந்த 02ஆம் திகதியே இறுதியாக கண்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பேராதனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மக்கள் விரோத செயற்பாடுகளை முன்னெடுத்தால் பின்னடைவுதான்

## மைத்திரிபால எச்சரிக்கை



கொழும்பு, ஒக். 05

“மக்கள் விரோத செயற்பாட்டை முன்னெடுத்தால் இறுதியில் பின்வாங்க வேண்டிய நிலையே ஏற்படும் என்பதற்கு அதிஉயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப்பட்டுள்ளமை சிறந்த சான்றாகும்.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அதிஉயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இரத்து செய்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மைத்திரி இவ்வாறு கூறினார்.

“தவறான முடிவுகளை எடுத்தால் பின்னடைவே ஏற்படும். மக்களுக்கு தேவையான விடயங்களை செய்யாமல், மக்கள் விரோதச் செயலில் ஈடுபட்டால் இதுபோல்தான் நடக்கும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போதுள்ள அமைச்சுகளே மக்களுக்கு பெரும் சுமையாகும். இந்நிலையில் புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளமை நாட்டுக்கு பெரும் அனர்த்தமாகும்.” - எனவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

அதேவேளை, தேசியப் பேரவையில் அங்கம் வகிக்காத கட்சிகளின் முடிவை பாராட்டி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விசேட அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது. (அ)

# தொழிலுக்குச் சென்ற மீனவரை காணோம்!

மட்டக்களப்பு, ஒக். 05

காத்தான்குடி கடலில் தோணியில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கர்ப்பலா பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய மீராசாயிப் முபாரக் என்ற மீனவர் சம்பவ தினமான நேற்று முன்தினம் இரவு தனது தோணியில் பாலமுனை கடற்கரையில் இருந்து கடலில் மீன்பிடிக்கச் சென்று கரைக்கு திரும்பாததையடுத்து அவரை கடலில் தேடியபோதும் கண்டு பிடிக்க முடியவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அவரை கடற்படையினரின் உதவியுடன் தேடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# 5 லட்சம் பேருக்கு நிரந்தரமான லைசன்ஸ் வழங்கப்படவில்லை

கொழும்பு, ஒக்.05

நாட்டில் இதுவரை சுமார் 5 இலட்சம் பேருக்கு நிரந்தர சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க முடியவில்லை என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் அதற்குரிய அட்டைகள் இல்லாத காரணத்தினால் அவர்களுக்கு தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்தார்.

சுமார் 10 இலட்சம் அட்டைகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் முதல் தொகுதியாக 5 இலட்சம் அட்டைகள் இம்மாதம் கிடைக்கப் பெறும் என எதிர் பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்காக 43 மில்லியன் ரூபாய் செலவிடப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# அபிவிருத்தியடைந்து வந்த நாட்டை நாசப்படுத்திய போராட்டக்காரர்கள்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க விசனம்

கொழும்பு,ஒக்.05

**மிக வேகமாக அபிவிருத்தியடைந்து கொண்டிருந்த நாட்டின் பொருளாதாரமும் சமூகமும் போராட்டக்காரர்களால் நாசமாக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**



நாட்டைக் கட்டியெழுப்பும் வெற்றிகரமான வேலைத்திட்டத்தை அழித்த போராட்டக்காரர்களே இந்த பொருளாதார அழிவுக்கு முழுப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், கடந்த அரசாங்கத்தின்போது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான அனைத்து திட்டங்களும் கொரோனா மற்றும் ரஷ்யா-உக்ரைன் யுத்தம் காரணமாக கைவிடப்பட்டதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார். (அ)

# ரயிலில் மோதுண்டு இளைஞன் பலி

கொழும்பு, ஒக். 05

ரத்கம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஜயரத்ன மாவத்தை பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் இளைஞர் ஒருவர் ரயிலுடன் மோதி உயிரிழந்துள்ளார்.

ரத்கம, கம்மெத்தேகொட பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காலியில் இருந்து அம்பலாங்கொடை நோக்கி பயணித்த ரயிலுடன் மோதுண்டதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ரயிலில் மோதுண்டு படுகாயமடைந்த இளை ஞன் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இலங்கை அரசின் முயற்சியை பாராட்டியுள்ளதாம் உலக வங்கி!



கொழும்பு, ஒக்.05

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் அரசாங்கத்தின் முன் முயற்சியை உலக வங்கி பாராட்டியதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

மாலைதீவுகள், நேபாளம் மற்றும் இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர்பாரிஸ் ஹடாட் செர்வோஸூடன் நடத்திய விசேட கலந்துரையாடலின்போது, இந்த பாராட்டு கிடைக்கப் பெற்றதாக அவர் தெரிவித்தார்.

வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீட்பதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி வருவதாகவும், மேலும் நிர்வாக சீரமைப்பு, விரிவான கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் திட்டத்தில் முன்னேற்றம் போன்றவற்றை மேலும் தொடர ஊக்குவிப்பதாகவும் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் கூறினார் எனவும், இலங்கையின் நிலைமையை உலக வங்கி உன்னிப்பாக அவதானித்து வருவதாக அவர் குறிப்பிட்டார் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உட்பட மேலும் பல அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ)

# மேலும் 1 மில்லியன் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கு திட்டம்

கொழும்பு, ஒக். 05

மேலும் ஒரு மில்லியன் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அந்த வகையில் 7,926 பாடசாலைகளைச் சேர்ந்த 1.08 மில்லியன் மாணவர்களை இலக்காகக் கொண்டு மதிய உணவுத் திட்டத்தை ஆண்டுதோறும் 4 மில்லியன் செலவில் செயல்படுத்தப் படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வறுமையை ஒழிக்கும் கொள்கையின் கீழ், ஊட்டச்சத்து தொடர்பான எதிர்பார்ப்புக்களை நிவர்த்தி செய்யும் நோக்கத்தில் திட்டங்களை உடனடியாக செயல்படுத்த அரசு எதிர்பார்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மேலும் ஒரு மில்லியன் பாடசாலை மாணவர்களுக்கு ஆரோக்கியமான மதிய உணவு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வறுமை மற்றும் ஊட்டச்சத்து குறித்த மாவட்ட அளவிலான தரவுகளின் அடிப்படையில் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் பாடசாலை மதிய உணவு திட்டத்திற்கு கூடுதலாக இந்த நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# திருமலை பத்திரகாளி அம்பாளின் ஆலயத்தில் கேதார கௌரி விரதம்

ஆதிகாலம் முதல் விரதங்களிலே மிகச் சிறந்த விரதமாக ஆண்றோர்களால் அனுஷ்டிக்கப்பட்டு நற்பலன் அளித்து வருவது கேதார கௌரி விரதமே ஆகும்.

திருகோணமலை அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில்தான் மிகவும் கூடுதலான பக்தர்கள் இவ் விரதத்தை அனுஷ்டிக்கின்றனர்.

இன்று புதன்கிழமை இவ் விரதம் ஆரம்பித்து 25 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கூடிய அமாவாசைத் தினத்தன்று நிறைவு பெறுகின்றது. இருபத்தொரு நாள் விரதமனுஷ்டிக்க விரும்பும் அடியார்கள் ஆரம்ப தினத்தன்று சங்கற்பம் செய்து தினமும் ஆலய தரிசனம் பண்ணி இறுதி நாளன்று உபவாசமிருந்து திருக்காப்பை அணித்து கொள்ளலாம். இருபத்தொரு நாளும் விரதமனுஷ்டிக்க இயலாதவர்கள் விரத இறுதி நாளாகிய 25 ஆம் திகதி உப வாசமிருந்து நோன்புக்கயிற்றை அணிந்து கொள்ளலாம் என ஆலயத் தின் ஆதினகர்த்தாவும் பிரதமகுருவும் ஆகிய பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் தெரிவித்தார். (அ)

# சனத் நிஷாந்தவை தண்டிக்க கோரி மனு!

கொழும்பு, ஒக். 05

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாகவும அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அவருக்கு தண்டனை வழங்குமாறு கோரி நீதிச் சேவைகள் சங்கம் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளது.

போராட்டத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்பட்டமை தொடர்பில் அவர் வெளியிட்ட கருத்தை முன்னிறுத்தி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கடந்த ஒகஸ்ட் 23 ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, இராஜாங்க அமைச்சர் சனத் சனத் நிஷாந்த வெளியிட்ட கருத்தின் மூலம் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த கருத்தின் மூலம், நீதவானுக்கு உரிய அதிகாரத்தை அவர் சவாலுக்கு உட்படுத்தியுள்ளதாகவும் நீதிமன்றத்தின் கௌரவத்தை உதாசீனம் செய்துள்ளதாகவும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த செயற்பாடானது அரசியலமைப்பின் 105 ஆம் சரத்தின் கீழ் குற்றமாகும் என நீதிச் சேவைகள் சங்கம் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டின் சகல நீதவான்களும் மாவட்ட நீதிபதிகளும் நீதிச் சேவைகள் சங்கத்தில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மூன்று மாவட்டங்களுக்கு 175,000 மெ.தொன் யூரியா

கொழும்பு, ஒக். 05

3 மாவட்டங்களுக்கு தேவையான 175,000 மெற்றிக் தொன் யூரியா உரம் முதல் தொகுதியாக விநியோகிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

பெரும்போகத்தில் சோளச் செய்கைக்காக இந்த உரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

மொனராகலை, குருநாகல் மற்றும் அனுராதபுரம் ஆகிய 3 மாவட்டங்களுக்கான யூரியா விநியோகம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் ஆலோசனைக்கமைய கொமர்ஷல் உர நிறுவனத்தினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய மொனராகலை மாவட்டத்தின் சியம்பலாண்டுவ, எத்திமலே மற்றும் தம்பகல்ல பிரதேசங்களில் சோளச் செய்கைக்கு 75,000 மெற்றிக் தொன் யூரியா உரமும் குருநாகல் மாவட்டத்தின் எஹதுவெவ பிரதேசத்திற்கு 25,000 மெற்றிக் தொன் யூரியா உரமும் அனுராதபுரம் மாவட்டத்தின் மிஹிந்தலை மற்றும் கலென்கபிந்துவெவ பிரதேசங்களுக்கு 75,000 மெற்றிக் தொன் யூரியா உரமும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

# பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து சி.டி. விக்கிரமரத்னவை நீக்குங்கள்!

## ஜனாதிபதிக்கு மொட்டு கட்சி கடும் அழுத்தம்

கொழும்பு, ஒக். 05

**சி.டி. விக்கிரமரத்னவை பொலிஸ் மா அதிபர் பதவியில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதிக்கு கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவின் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற ஆளும் கட்சி உறுப்பினர் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் பலர் பொலிஸ் மா அதிபரின் செயற்பாடுகளை இதன்போது விமர்சித்துள்ளனர்.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களின்போது போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்தத் தவறியதாக பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் பலரும் கடுமையாகக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

அத்துடன், சி.டி. விக்கிரமரத்னவை பொலிஸ் மா அதிபர் பதவியில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதிக்கு இதன்போது கடும் அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எவ்வாறாயினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எவ்வித பதிலும் தெரிவிக்காமல் வழமையான மௌனக் கொள்கையை கடைப்பிடித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# உள்ளூர் பால் மாவின் விலையும் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 05

உள்ளூர் பால் மாவின் விலையை அதிகரிக்க பால் மா உற்பத்தியாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதற்கமைய 450 கிராம் உள்ளூர் பால் மா பொதியின் விலை 125 ரூபாவினாலும், 850 ரூபாவாக இருந்த 450 கிராம் பால் மா பொதி 975 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சந்தையில் தற்போது உள்ளூர் பால் மாவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# டீசல் , மசகு எண்ணெய்க் கப்பல்களுக்கு இதுவரை கட்டணம் செலுத்தப்படவில்லை!

கொழும்பு, ஒக். 05

நாட்டை வந்தடைந்துள்ள டீசல் மற்றும் மசகு எண்ணெய் ஏற்றிய 02 கப்பல்களுக்கு இதுவரை கட்டணம் செலுத்தப்படவில்லை என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த கப்பல்களில் 40,000 மெற்றிக் தொன் டீசல் மற்றும் ஒரு இலட்சம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய் காணப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, மற்றுமொரு கப்பலிலிருந்து 37,000 மெற்றிக் தொன் பெற்றோலை தரையிறக்கும் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் நிறைவடைந்துள்ளன.

மேலும், விமானங்களுக்கான 11,000 மெற்றிக் தொன் எரிபொருளுடன் நாட்டை வந்தடைந்த கப்பலிலிருந்து எரிபொருள் தற்போது தரையிறக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# ரயில்வே திணைக்களத்தின் செயற்படாத இணையத்தளம்

## பயணிகள் தரப்பில் முறைப்பாடு

கொழும்பு, ஒக்.05

ரயில் பயணிகளின் முறைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு, திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையப் பக்கத்தைப் புதுப்பிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ரயில்வே திணைக்கள பொது முகாமையாளரிடம் ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் ரயில்வே திணைக்கள பொது முகாமையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

ஐந்து ஆண்டுகளாக இணையத்தளம் புதுப்பிக்கப்படவில்லை. இணையத்தளத்தை நிர்வகிப்பதற்கும், பயணிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும் முறையான புதுப்பிப்பை உறுதி செய்வதற்கும் ஒரு அர்ப்பணிப்புள்ள பணியாளர் நியமிக்கப்படவேண்டும் என்பதை ரயில் கையிரத நிலைய அதிபர்கள் சங்கம் நினைவூட்டியுள்ளது.

தற்போது, நம் சமூகத்தில் வாழும் பெரும்பாலான மக்கள் சமீபத்திய தொழில்நுட்பத்தை நன்கு அறிந்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையை எளிதாகவும் திறமையாகவும் பெறுவதற்கு மிகவும் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துகிறார்கள்.

ஏனைய பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் மக்களிடம் தங்கள் சேவைகளை கொண்டு செல்வதில் இப்போது வெற்றி பெற்றுள்ளன.

150 ஆண்டுகளுக்கும் மேலான பெருமைமிக்க வரலாற்றைக் கொண்டுள்ள ரயில்வே துறை, தற்போதும் கைவசம் உள்ள நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் மிகவும் பின்தங்கியிருப்பது மிகவும் வருத்தமளிக்கிறது. இந்தத் தேவையின் முக்கியத்துவத்தை நாம் தொடர்ந்து பலமுறை நினைவூட்டியும், தொழில்நுட்ப மாற்றத்தைத் தழுவுவதற்கு முன்னோக்கி நகர்த்துவதற்குத் துறை விருப்பம் காட்டவில்லை. இங்கு நாம் சந்திக்கும் முக்கிய குறை என்னவென்றால், இந்த இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள ரயில் அட்டவணை துல்லியமாக இல்லை என சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போதைய கால அட்டவணையில் ஏராளமான பிழைகள் மற்றும் தவறுகள் உள்ளன. மேலும் புதிய கால அட்டவணைகள், அட்டவணைகள் போன்றவற்றில் எந்த புதுப்பிப்பும் காட்டப்படவில்லை. இந்த குறைபாடு எத்தனை முறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது என்பது முக்கியமல்ல. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான பயம் அவர்களுக்குள் விதைக்கப்பட்டு, அவர்கள் தொடர்ந்து புறக்கணிக்கிறார்கள்.

ரயில்கள் இயங்கும் அட்டவணையை அறிய, அதிகாரப்பூர்வ இணையத்தளத்தைப் பார்வையிடுவதற்கு இளம் சமூகம் பழக்கமாகிவிட்டது. ஆனால் அதில் கொடுக்கப்பட்ட நேரம் மற்றும் பிற தகவல்கள் தவறானதாக இருக்கும்போது, தவறான தகவல்களுடன் ரயில் நிலையத்திற்கு வரும் பயணிகள், திகைத்து, பணியில் இருக்கும் ரயில் நிலைய அதிபர்கள் மீது பழியை சுமத்துகின்றனர். இது எங்களுக்கு மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்துகிறது. மேலும், பெரும்பாலான உள்ளூர்வாசிகள் மற்றும் வெளிநாட்டிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் இணையதளத்தில் உள்ள தகவல்களின்படி தங்கள் பயணங்களைத் திட்டமிடுகிறார்கள்.

ஆனால் அவர்கள் பெறும் தகவல்கள் தவறானதாக இருக்கும்போது, அவர்கள் பெரும் குழப்பத்தில் உள்ளனர்.

எனவே, ரயில் பயணிகளுக்கு சிறந்த மற்றும் திறமையான சேவையை வழங்குவதற்கு விரைவான தீர்வுகளை வழங்கவும், இந்த குறைபாட்டை நிவர்த்தி செய்யுமாறும் ரயில்வே திணைக்கள பொது முகாமையாளரிடம் ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

# எரிபொருள் விநியோகத்தில் தடைகள் எதுவுமே இல்லை!

## அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 05

எரிபொருள் விநியோக நடவடிக்கைக்கு எவ்வித தடையும் ஏற்படாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

மக்கள் அநாவசியமாக அச்சத்தை ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, நேற்று காலை 8 மணி முதல் நாடளாவிய ரீதியில் எரிபொருள் முற்பதிவு நடவடிக்கையில் இருந்து விலகியுள்ளதாக பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் அறிவித்தது.

விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடியில் 45 வீதத்தை மீள அறவிடுவதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. (அ)

# 3000 மலையக வீடுகள் மண் சரிவு அபாயத்தில்!

கொழும்பு, ஒக். 05

மலையகத்தில் 3000 அதிகமான வீடுகள் மண்சரிவு அபாயத்தில் உள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஜனாதிபதி உட்பட சகல தரப்பினரிடமும் வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மண்சரிவு அபாய வலயத்தில் வாழ்ந்த காளியம்மா இன்று உயிரிழந்ததைப் போன்று, நாளை மண்சரிவு அபாயத்தில் உள்ள பகுதிகள் பாதிக்கப்படும் வாய்ப்புகள் அதிகம்.

எனவே, இது தொடர்பில் பிரதமருடன் கலந்துரையாடியுள்ளதுடன், ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் காணி அமைச்சர் ஹரீனுடனும் தனிப்பட்ட ரீதியில் தொலைபேசியில் தொடர்கொண்டு பேசியதாகத் தெரிவித்த அவர், இதற்கு உடனடியாக தீர்வை எடுக்கவேண்டும். நாட்கள் செல்ல செல்ல இதன் ஆபத்து அதிகம்-என்றார். (அ)

ஈழநாடு



# வடக்கில் போதைப்பொருள் புழக்கம்: கடல் கடந்து வரும் ஆபத்து!

யூ.எல். மப்றூக்

இலங்கையின் வடக்கில் போதைப்பொருள் புழக்கம் மற்றும் எச்ஐவி தொற்று பாதிப்பு அதிகரித்துள்ளது. அங்குள்ள கள நிலவரத்தை இங்கே விவரிக்கிறோம்.

பத்தாம் வகுப்பு படிக்கும்போது சுகுமார் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) புகைத்தல் பழக்கத்துக்கு ஆளாகி விட்டார். 18 வயதாகும் போது ஹெரோயின் போதைப் பொருள் பாவிக்கத் தொடங்கி - காலப் போக்கில் அதற்கு அடிமையானார். இப்போது அவருக்கு 28 வயதாகிறது. கடந்த வருடம் கோவிட் தொற்று அதிகரித்திருந்த காலகட்டத்தில், வழமைபோன்று ஹெரோயின் கிடைக்கவில்லை.

அதனால், அதற்கு அடிமையான சுகுமாருக்கு கடுமையான உடல் வலி மற்றும் உளரீதியான பிரச்சினைகள் ஏற்பட்டன. ஒரு கட்டத்தில் - போதையினல் பாதிக்கப்பட்டோருக்கு புனர்வாழ்வளிக்கும் மட்டக்களப்பிலுள்ள நிலையமொன்றில் தன்னைச் சேர்த்து விடுமாறு தனது குடும்பத்தினரை சுகுமார் வேண்டிக் கொண்டார். அதற்கிணங்க அங்கு அவர் ஒரு மாதகாலம் தங்க வைக்கப்பட்டார். இதன்போது போதைக்கு அடிமையான நிலையிலிருந்து அவர் மீண்டார். ஆனாலும் “கதை“ இன்னும் முடிவில்லை.

சுகுமார் - வடக்கு மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். போதைக்கு அடிமையான நிலையிலிருந்து மீண்ட அவர், தனது சொந்த ஊருக்குத் திரும்பிய பின்னர், இப்போது மீளவும் சிறுகச் சிறுக - போதைப் பொருட்களைப் பாவிக்கத் தொடங்கியுள்ளார்.

இப்போது அவர் ஹெரோயின் பாவிப்பதில்லை. சிகரட், கஞ்சா புகைக்கத் தொடங்கியுள்ளார். வலி நிவாரணத்துக்காக பாவிக்கும் ஒருவகை மாத்திரையை - அதிக அளவில் எடுத்துக் கொள்வதன் மூலம், அவர் தனக்கு போதையேற்றிக் கொள்கிறார்.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மாகாணத்தில் - சுகுமார் போன்று ஆயிரக் கணக்கானோர் இவ்வாறு போதைப் பழக்கத்துக்கு ஆளாகியுள்ளனர். குறிப்பாக ஹெரோயின் போதைப் பொருள் பயன்பாடு அங்கு அச்சுறுத்தும் வகையில் அதிகரித்திருக்கிறது.

“கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இரண்டு மடங்குக்கும் அதிகமாக வடக்கில் போதைப் பொருள் பாவனை உயர்வடைந்திருக்கிறது,” என்கிறார் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி.

இதேவேளை, கடல் வழியாக போதைப் பொருள் கடத்தி வரப்படும் இடமாகவும் “வடக்கு“ மாறியுள்ளது.

இந்த நிலையில், ஹெரோயின் பாவனையினால் பாதிக்கப்பட்ட நிலையில் - யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 10க்கும் மேற்பட்டோர் கடந்த மூன்று மாதங்களில் மரணமடைந்துள்ளனர் எனவும் டாக்டர் சத்தியமூர்த்தி கூறுகின்றார்.

ஹெரோயின் போதைப்பொருளுக்கு அடிமையான நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக கடந்த ஜூன் மாதம் 54 பேர் அழைத்து வரப்பட்டிருந்தனர். ஜூலையில் 53 பேர், ஆகஸ்ட் மாதம் 93 பேர், செப்டம்பர் 112 பேர் என - சிகிச்சைக்காக வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

போதைப் பொருள் தொடர்பான குற்றச் செயல்களில் ஈடுபட்டமைக்காக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களே இவ்வாறு அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிலைமைகளைக் கருத்திற் கொண்டு, அண்மையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையினர் - போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனைக்கு எதிராக விழிப்புணர்வு பேரணியொன்றில் ஈடுபட்டதோடு, யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் கே. மகேசனிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினையும் கையளித்திருந்தனர்.

சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர், பெற்றோர் மற்றும் பாடசாலைகளைத் தாண்டி, வடக்கில் போதைப் பொருள் வியாபாரம் மிகவும் நுணுக்கமாக நடைபெறுவதாக டாக்டர் சத்திமூத்தி சுட்டிக்காட்டுகின்றார்.



“யுத்தத்தின் பின்னர் மக்களிடமிருந்த பதட்டம், பொலிஸார் மற்றும் ராணுவத்தினரின் அதிகரித்த பிரசன்னத்தினால் ஏற்படும் பயம், வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் பணம் போன்றவை - போதைப் பாவனை அதிகரிப்புக்கு காரணங்களாக இருக்கக் கூடும் எனவும் அவர் கூறுகின்றார்.

“பாடசாலை மாணவர்களில் தொடங்கி, 30 வயது வரையிலானோரே ஹெரோயின் பாவனையில் அதிகளவில் ஈடுபடுகின்றனர். ஆரம்ப கட்டத்தில் போதையின்பத்துக்காகவும் - பின்னர் அடிமைப்பட்ட நிலையிலும் இவர்கள் ஹெரோயின் போதைப் பொருளைப் பாவிக்கின்றனர்” என அவர் விவரித்தார்.

**ஹெரோயினுக்கு எப்படி அடிமையானார்?**

இந்தக் கட்டுரையில் நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட சுகுமார், எவ்வாறு ஹெரோயின் பழக்கத்துக்கு அடிமையானார்? எனும் கேள்விக்கு - அவரின் சித்தி (அம்மாவின் சகோதரி) பதிலளிக்கும் வகையில் பேசினார்.

“அவர் சிறிய வயதிலேயே தந்தையை இழந்து விட்டார். தாய் நடத்தி வந்த வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டதால் கடன் தொல்லை ஏற்பட்டது.




அதனால், சுகுமாரை விட்டும் அவரின் தாய் வேறொரு இடத்துக்குச் சென்றார். இதனால், சிறு வயது தொடக்கம் அவர் தனிமையுடன்தான் வாழ்ந்தார். இந்த நிலை தான் அவரை போதைப் பழக்கத்துக்குள் தள்ளியது”.

“அவரின் 15 வயதில், 10ஆம் வகுப்புப் படிக்கும் போது அவருக்குப் புகைத்தல் பழக்கம் ஏற்பட்டது. 18 வயதில் அவர் ஹெரோயின் பழக்கத்துக்கு ஆளானதை நான் அவதானித்தேன். ஆனால், அவரின் தாயார் அதனை நம்ம மறுத்தார்.

அவரின் உடல் மெலிந்து கொண்டு சென்றது. சாப்பாட்டில் நாட்டமிருக்கவில்லை. குளிர்பானங்களை அதிகமாக அருந்தினார். வித்தியாசமான நண்பர்கள் அவரைத் தேடி வரத் தொடங்கினார்கள். இவற்றினை வைத்து - அவர் போதைப் பழக்கத்துக்குள் விழுந்து விட்டார் என்பதை புரிந்து கொண்டேன்.

ஒரு கட்டத்தில் அவர் ஹெரோயினுக்கு அடிமையானார். அது இன்றி இருக்க முடியாத நிலை அவருக்கு ஏற்பட்டது. ஹெரோயின் வாங்குவதற்கு காசு இல்லாது விட்டால் - தடுமாறிக் கொண்டு திரிவார். காசு கேட்டு அழுவார். அடுத்தவரின் பணத்தைப் பறித்துக் கொண்டு ஓடியிருக்கிறார். ஒருநாள் ஹெரோயின் இல்லாத போது - அவர் வலியினால் அழுது துடித்ததைப் பார்த்து, பரிதாபத்தில் - அவரின் அம்மம்மா ஐநூறு ரூபா பணம் கொடுத்து அனுப்பினார்.

இப்படியிருக்கையில் அவருக்கு சிகிச்சை பெற்றுக்கொடுக்க நாம் தீர்மானித்தோம். அதற்கு அவர் இணங்கினார், பிறகு மறுத்து விட்டார். இப்படி நாட்கள் கடந்தன.

கடந்த வருடம் கோவிட் உச்சத்தில் இருந்தபோது அவர்களுக்கு வழமை போன்று ஹெரோயின் கிடைக்கவில்லை. அதனால் அவர் கடுமையான உடல் வருத்தங்களுக்கு உள்ளானார். உடல் கொதிக்கத் தொடங்கி யது. வலி தாங்க முடியாமல் அழுதார்.

இந்த சூழ்நிலையில் போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் மட்டக்களப்பிலுள்ள நிலையமொன்றில் தன்னைச் சேர்த்து விடுமாறு கடந்த வருடம் ஜூலை மாதம், அவர் எங்களிடம் கேட்டார். அந்த நிலையத்தில் அவருக்கு தெரிந்த ஒருவர் - புனர்வாழ்வு பெற்று, போதைப் பழக்கத்திலிருந்து மீண்டதாக சுகுமார் கூறினார்.

அங்கு அவரை நாங்கள் சேர்த்தோம். ஒரு மாதம் அவருக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டது. போதைப் பழக்கத்திலிருந்து அவர் முற்றிலுமாக மீண்டார். இதனையடுத்து அவர் ஊர் திரும்பினார்.

ஆனால், இப்போது அவர் சிறிது சிறிதாக மீண்டும் போதைப் பழக்கத்துக்கு ஆளாகி வருகிறார். சிகரட், கஞ்சா புகைக்கிறார். அதிகளவில் வலி நிவாரணம் வழங்கும் மாத்திரைகளை போதைக்காகப் பயன்படுத்துகிறார். அவர் மீண்டும் ஹெரோயின் பழக்கத்துக்கு ஆளாகி விடுவாரோ என அச்சப்படுகிறோம். அதற்கு முன்னர் அவருக்கு சிகிச்சை வழங்க வேண்டும்” என கவலையுடன் பேசி முடித்தார் சுகுமாரின் சித்தி.

**போதைப் பழக்கத்தால் அதிகரிக்கும் தொற்று நோய்கள்**

போதைப் பழக்கத்திலிருந்து மீள்வதற்காக - யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் “கிளினிக்” நடைபெறுவதாகக் கூறுகின்றார் அந்த வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி.

போதை நோயுடன் வருவோர் - வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதாவும் அவர் கூறுகின்றார்.

“ஹெரோயின் பாவனையினால் பாதிக்கப்பட்டு, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் 10 பேர், கடந்த மூன்று மாதங்களுக்குள் மரணித்துள்ளனர்” எனவும் அவர் இதன் போது குறிப்பிட்டார்.

“ஹெரொயின் தூளை - முன்னர் அலுமினியம் கடதாயிசில் வைத்து சூடாக்கி அதில் வெளிவரும் புகையை உள்ளிளுப்பர், ஆனால் தற்போது ஹெரோயின் தூளுடன் திரவங்களைக் கலந்து அதனை நரம்பு வழியாக ஊசி மூலம் உடலில் செலுத்திக் கொள்கின்றனர். உடனடியாகப் போதையினை பெற்றுக் கொள்ள அவர்கள் இவ்வாறு செய்கின்றனர்”.

“இதன் போது அவர்கள் பயன்படுத்தும் ஊசி - தொற்று நீக்கப்படுவதில்லை, ஒரே ஊசியை பலரும் பயன்படுத்துகின்றனர். இதன் காரணமாக இவர்கள் பல்வேறு தொற்றுக்களுக்கு ஆளாகின்றனர். ஊசி மூலம் ஹெரோயினை உடலில் செலுத்திக் கொண்டவர் களுக்கு கிருமித் தொற்று ஏற்பட்டு, அதன் மூலம் பலர் இறந்துள்ளனர்” எனவும் டாக்டர் சத்தியமூர்த்தி கூறினார்.

குறிப்பாக எச்ஐவி தொற்றுக்குள்ளானவர்கள் பயன்படுத்தும் ஊசியை மற்றவர்கள் பாவிக்கும் போது, அவர்களுக்கும் எச்.ஐ.வி தொற்று ஏற்படுகின்றது என்றும், வடக்கில் ஹெரோயின் பாவனை காரணமாக எச்ஐவி தொற்றும் அதிகரித்துச் செல்கிறது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

போதைப் பொருள் பாவனை அதிகரித்து வரும் அதேவேளை, அதற்கு நிகராக சமூகத்தில் குற்றச் செயல்களும் அதிகரித்துள்ளன.

“ஹெரோயின் போதைப்பொருளுக்கு அடியான ஒருவருக்கு சிகிச்சை வழங்கப்படும் போது, அவரை வைத்தியர்கள் குடும்பத்தார் மற்றும் சமூகத்திலுள்ளோர் அனைவரும் கரிசனையுடன் பார்த்துக் கொள்ள வேண்டும். **(09 ஆம் பக்கம் பார்க்க...)**

# உக்ரைன் - ரஷ்ய போர் எதிரொலி: உலகை அச்சுறுத்தும் பணவீக்கம்!

உக்ரைனில் நீடித்து வரும் போர், பெரும்பாலான நாடுகளின் வளர்ச்சிக் கணிப்புகளை கணிசமாகக் குறைத்துள்ளது.

உலகளாவிய அளவில் உச்சம் தொட்டு வரும் பணவீக்கத்தால் மத்திய வங்கிகள் வட்டி விகித உயர்வை அறிவித்து வருகின்றன. இதனால், உலகப் பொருளாதாரம் மந்தநிலைக்குச் செல்லும் அபாயம் காணப்படுவதாக பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (ஓஇசிடி) எச்சரித்துள்ளது.

உக்ரைன் மீதான போரைத் தொடர்ந்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், ரஷ்யா ஐரோப்பிய நாடுகளுக்கான எரிவாயு விநியோகத்தைக் குறைத்துள்ளது. அதனால் அந்த நாடுகளில் தொழில்துறை பாதிக்கப்பட்டிருக்கிறது.

ஜெர்மனி, இத்தாலி, இங்கிலாந்து உள்ளிட்ட முக்கிய ஐரோப்பிய நாடுகள் பொருளாதார மந்த நிலையை நோக்கி நகருகின்றன. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு, உலகளாவிய வளர்ச்சி முன்னறிவிப்பை 2.8 வீதத்தில் இருந்து 2023-இல் 2.2 வீதமாகக் குறைத்துள்ளது. அதிகரித்து வரும் மக்கள்தொகைக்கு ஏற்ப உலகப் பொருளாதாரம் குறைந்தது 4 வீத வளர்ச்சி அடைய வேண்டும். ஆனால், அது சாத்தியமில்லை.

ஐரோப்பிய பிராந்தியத்தில் யூரோ நாணயத்தைப் பயன்படுத்தி வரும் பெல்ஜியம், ஜெர்மனி, அயர்லாந்து, ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி, லக்சம்பர்க், நெதர்லாந்து, ஆஸ்திரியா, போர்த்துக்கல், பின்லாந்து, கிரீஸ், ஸ்லோவேனியா, சைப்ரஸ், மால்டா, ஸ்லோவாக்கியா, எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகிய 19 நாடுகளின் வளர்ச்சி மொத்தத்தில் 3.1 வீதத்தில் இருந்து 2023-இல் 0.3 % ஆக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மிகவும் வலுவான பொருளாதாரங்களும் கடும் சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. ஜெர்மனியின் பொருளாதாரம் அடுத்த ஆண்டு 0.7 வீதமாக சுருங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது கடந்த ஜூன் மதிப்பீட்டில் 1.7 வீதமாக இருந்தது. சீனாவின் வளர்ச்சி இந்த ஆண்டு 3.2 வீதமாகக் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அது 1970-க்குப் பிறகு சீனா மிகக் குறைந்த வளர்ச்சியைப் பதிவு செய்வதாக அமையும். இந்த ஆண்டு 1.5 வீதமாக உள்ள வல்லரசான அமெரிக்காவின் வளர்ச்சி, 2023-இல் 0.5 வீதமாக குறையும் என்றும் வல்லுநர்கள் கணித்துள்ளனர்.



கடந்த மே மாத கணக்கின்படி பணவீக்கப் பட்டியலில் ரஷ்யா முன்னிலையில் (17.8 வீதம்) உள்ளது. இதற்கு அடுத்ததாக நைஜீரியா (16.8), போலந்து (12.4), பிரேசில் (12.1), நெதர்லாந்து (9.6), பிரிட்டன் (9), ஸ்பெயின் (8.3), அமெரிக்கா (8.3) உள்ளன. இந்தியா (7.8) ஒன்பதாவது இடத்தில் உள்ளது. பொருளாதாரத்தில் முன்னிலையில் உள்ள சீனாவின் பணவீக்கம் 2.1 வீதம். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பெரும்பாலான நாடுகளின் மத்திய வங்கிகள் வட்டி விகிதத்தை உயர்த்துகின்றன.

கடந்த வாரம் அமெரிக்க மத்திய வங்கியான ஃபெடரல் ரிசர்வ் வட்டி விகிதத்தை 0.75 சதவீதம் உயர்த்தியுள்ளது. மேலும் வட்டி விகித உயர்வுகள் அறிவிக்கப்படலாம் என்றும் எச்சரித்துள்ளது. அமெரிக்க மத்திய வங்கியின் அளவுக்கதிகமான வட்டி விகித உயர்வுகள், 'ரிஷஸன்' என்று சொல் லப்படும் பொருளாதார மந்தநிலைக்கான அறிகுறியாகப் பார்க்கப்படுகிறது.

அமெரிக்க ஃபெடரல் வங்கி, இந்திய ரிசர்வ் வங்கி உள்பட எல்லா மத்திய வங்கிகளும் தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார வளர்ச்சி பாதிப்பை முன் கூட்டியே கணிக்கத் தவறிவிட்டன. அதனால், 2023 - 24 நிதியாண்டு இதுவரை இல்லாத அளவிலான பொருளாதாரத்திற்கு மந்தநிலை ஆண்டாக இருக்கும் என பல மதிப்பீடுகள் எச்சரிக்கின்றன.

இந்த நிலையில், இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு (எம்பிசி) சில தினங்களுக்கு முன் வட்டி விகிதத்தை 0.5 வீதம் அதிகரித்துள்ளது. இதன்படி மொத்த வட்டி விகிதம் 5.9 வீதமாக உள்ளது. இது ஏற்கெனவே உள்ள கடன்கள் மற்றும் புதிய கடன்களுக்கான தவணைத் தொகையை அதிகரிக்கச் செய்துள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை, வங்கி வட்டி விகித உயர்வு சாமனிய மக்களையும், நடுத்தர வர்க்கத்தினரையும் கடுமையாக பாதிக்கும். குறிப்பாக, குடும்பத்தின் மாதாந்திர பட்ஜெட் கடும் சிக்கலுக்கு உள்ளாகும். உலகளாவிய மந்தநிலை இந்தியப் பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான தேவையைக் குறைத்து ஏற்றுமதி வருவாயை கடுமையாக பாதிக்கக் கூடும். கொள்ளை நோய்த் தொற்றிலிருந்து மீண்டெழும் இந்தியப் பொருளாதாரம் உக்ரைன் போர் காரணமாக பின்னடைவை எதிர்கொள்கிறது.

பணவீக்கத்துக்கு எதிரான வட்டி விகித உயர்வு நடவடிக்கையில் மத்திய வங்கிகளின் கொள்கை முடிவுகளும் எந்த அளவுக்கு பொருளாதார வீழ்ச்சியைத் தடுத்துவிடும் என்பது தெரியவில்லை. அவை மேலும் சிக்கலை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டுமே என்பதுதான் மிகப் பெரிய கவலை.

'பணவீக்கத்தால் எதிர்கொள்ள நேரிடும் நெருக்கடியை சமாளிக்க முன்னெடுக்கப்படும் வட்டி விகித உயர்வுகள் உலகப் பொருளாதாரத்தை வேகமாக மந்தநிலைக்குத் தள்ளக்கூடும்' என்கிற உலக வங்கி எச்சரிக்கை கவனத்துக்குரியது. வட்டி விகித அதிகரிப்பு மக்களின் வாங்கும் சக்தியை குறைப்பதால் எதிர்பார்த்த பலனை அளிக்காமலும் போகலாம். வாங்கும் சக்தியை அதிகரிப்பதன் மூலம் மட்டுமே பொருளாதாரத்தை சுறுசுறுப்பாக்க முடியும் என்கிற கருத்தைப் புறந்தள்ளிவிட முடியாது.

**(தினமணி)**

# வடக்கில் போதைப்பொருள் புழக்கம்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அப்போதுதான் அவரைப் பாதுகாக்க முடியும். இல்லாவிட்டால், போதைக்கு அடிமையாகி அவர் இறந்து விடுவார்" என டாக்டர் சத்தியமூர்த்தி எச்சரித்தார்.

**சிகிச்சை எவ்வாறு உள்ளது?**

போதைக்கு அடியான நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றவர்களுக்கு, பாதிப்பின் தன்மைகளுக்கு ஏற்ப சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

"சிலருக்கு மருந்துகளை வழங்க வேண்டியிருக்கும். அதேவேளை அவர்களை அழைத்து வருகின்ற உறவினர்களுக்கும் சில ஆலோசனைகள் வழங்கப்படும்" எனத் தெரிவிக்கும் டாக்டர் சத்தியமூர்த்தி, "அண்மையில் ஒருவருக்கு வைத்தியசாலையில் வைத்து 42 நாட்கள் சிகிச்சை வழங்கப்பட்டது" என்கிறார்.

"போதைக்கு அடிமையானவர்கள், போதைப் பொருளை பயன்படுத்தாமல் இருக்கும் முதல் 10 நாட்களும், அவர்களுக்கு கடுமையான நாட்களாக இருக்கும். அதன்போது அவர்கள் பாரதூரமான வலியை உணர்வர். அதனை தாங்கிக் கொள்ள வேண்டும். தேவையானபோது வலி நிவாரண மாத்திரைகளை அவர்களுக்கு வழங்குவோம். இந்த நாட்களில் சிலர் தூக்கமின்றி அவதிப்படுவார்கள். இவ்வாறு போதைப் பொருளை கைவிடத் தொடங்கும் ஆரம்ப நாட்களில் அவர்கள் அதிகமாக தண்ணீர் அருந்த வேண்டும்" என அவர் கூறினார்.

படிப்பு எனும் பெயரில் பெற்றோரின் கடுமையான அழுத்தங்களை எதிர்கொள்ளும் மாணவர்கள், சமூக நிறுவனங்களுடன் தொடர்பற்றுப் போகும் நபர்கள் மற்றும் பெற்றோருடனான நெருக்கத்தை இழக்கும் பிள்ளைகள் போதைப் பொருள் பாவனைக்கு இலகுவில் ஆளாகி விடுகின்றனர் என அவர் குறிப்பிட்டார்.

வடக்கில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளமை காரணமாக, அங்குள்ள தமிழர்கள் ஆரோக்கியமற்ற சமூகமாகவும், கல்வியில் எழுச்சி குன்றியவர்களாகவும் மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் எச்சரித்தார்.

**இந்தியாவிலிருந்து கஞ்சா**

போதைப் பொருள் பாவனையினால் பாதிக்கப்பட்ட நிலையில் தானாகவோ அல்லது அவர்களின் குடும்பத்தவர்களினாலோ கடந்த வருடம் வைத்திய சாலைகளில் சிகிச்சைகளுக்கான அனுமதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 374 என யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் கே. மகேசன் தெரிவித்தார். கஞ்சாவை விடவும் ஹெரோயின் போதைப் பொருள் பாவனை தற்போது வடக்கில் அதிக பிரச்சினையாக மாறியுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

"இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து வடக்குக்கு அதிகமாக கஞ்சா போதைப்பொருள் கடல் வழியாகக் கொண்டு வரப்படுகிறது. ஹெரோயின் வேறு வழியாக வடக்குக்குள் வருகிறது. போதைப் பொருள் வியாபாரிகள் அனைத்து இடங்களிலும் - போதைப் பொருள் பாவனையைப் பழக்குகின்றனர். குறிப்பாக மாணவர்களையும் இளைஞர்களையும் இலக்கு வைக்கின்றனர்," என்கிறார் மாவட்ட அரச அதிபர் மகேசன்.

"வறுமை யில் இருப்போரை இந்தத் தொழிலுக்குள் இலகுவில் ஈர்த்து, அவர்களை போதைப் பொருள் கடத்தலில் வியாபாரிகள் பயப்படுத்துகின்றனர்" எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

குருநகர் பகுதியில் 13 வயது பெண் பிள்ளை ஒருவரை - போதைப் பொருள் கடத்துவதற்கு பயன்படுத்திய விடயம் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவித்த அவர், "குறித்த பிள்ளை பாடசாலைக்கு வராமையினை ஆராய்ந்த போதே இவ்விடயம் அம்பலமாகியது" என்றார்.

ஹெரோயின் போதைப் பொருள் வியாபாரிகள் மிகவும் நுட்பமானதொரு வலையமைப்பைக் கொண்டிருப்பதாக இதன்போது குறிப்பிட்ட அவர், கூலித் தொழிலாளர்களை அதிகமாகக் கொண்ட பகுதிகளிலேயே போதைப் பொருள் பாவனை அதிகமாக உள்ளது என சுட்டிக்காட்டினார்.

**"முதலில் தயங்கியவர்கள் இப்போது வெளி வந்துள்ளனர்"**

"நாங்கள் ஏற்கனவே விழிப்புணர்வு திட்டங்களை ஆரம்பித்து விட்டோம். பாடசாலை மட்டம், சமூக மட்டம் மற்றும் தொழில் செய்வோர் மட்டங்களில் எமது விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேவேளை போதைப் பொருள் கடத்தல் அதிகமுள்ள பகுதிகளிலும் எமது திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். உதாரணமாக கரையோரப் பகுதிகளிலுள்ள மீனவர் கள் - போதைப் பொருள் வியாபாரிகளால் குறி வைக்கப்படுகின்றனர்" என அவர் விவரித்தார்.

எது எவ்வாறிருப்பினும் போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பில் பொலிஸார் மிகவும் இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும் எனக் கூறும் அவர், போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்படுவோருக்கு பிணை வழங்குதல் கூடாது என்பது பொதுவான அபிப்பிராயமாக உள்ளது என்கிறார். "ஏனென்றால் பிணையில் வருவோர் மீண்டும் அதே குற்றங்களைச் செய்கின்றனர்" என அவர் குறிப்பிட்டார்.

"எமது நடவடிக்கைகள் காரணமாக சற்று விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளமையினை அவதானிக்க முடிகிறது. இவ்வளவு நாளும் தங்கள் பிள்ளைகள் போதைப் பொருளுக்கு அடியாகியுள்ளமையை வெளியில் சொல்வதற்கு வெட்கப்பட்டுக் கொண்டிருந்த பெற்றோர்கள், இப்போது தங்கள் பிள்ளைகளின் நிலைமை குறித்து அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதித் தெரியப்படுத்துவதோடு, அவர்களுக்குச் சிகிச்சை வழங்குமாறும் கேட்கின்றனர்" என்றார்.


பிள்ளைகள் குறித்து பெற்றோர் அவதானமாக இருக்க வேண்டும். அநேகமாக நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மூலமாகவே போதைப் பொருள் பழக்கம் ஏற்படுகிறது. ஒரு காலத்தில் அண்ணன் - தம்பி உறவு என்பது மரியாதைக்குரியதாக இருந்தது.

இப்போது தம்பிக்கு அண்ணன் போதையைப் பழக்கும் நிலைமை களையும் காண முடிகிறது என்கிறார் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மகேசன்.

**(பிபிசி)**

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........    ii) 18 , 15 , 12 , ............. , ...........

**21)** [3, 9, 14, 6, 10, 12,] பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

..........................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ....................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.......................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.......................................................    (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)     2)     3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி    2) இரணைமடுக்குளம்    3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்    2) உதிப்பு    3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்    2) வாளேந்திய சிங்கம்    3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976    2) 1851    3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு    2) இறப்பர், தாழம்பூ    3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6    2) 8    **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130    2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745    **23.** 455
**24.** 1l 100ml / 1100ml    **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190    2) 100    3) 290
**27.** 15 : 30    **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1    **31.** 2    **32.** 3
**33.** 2    **34.** 3    **35.** 2

### கல்வி tv CHANNEL-1 — 05.10.2022 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2 — 05.10.2022 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கிழக்கு மாகாணத்தை முழுக்க நாசப்படுத்திவிட்டார் ஆளுநர்!

## சபையில் சாணக்கியன் குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.05

**கோட்டாபய ராஜபக்ஷவின் வியத்மக அமைப்பின் உறுப்பினரான கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாணத்தை முழுமையாக நாசப்படுத்திவிட்டார் எனக் குற்றஞ்சாட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.இரா.சாணக்கியன், மயிலந்தனை மேய்ச்சல் தரை தொடர்பில் மீண்டும் வழக்குத் தாக்கல் செய்ய நேரிடும் எனவும் கூறினார்.**

பாராளுமன்றில் இடம் பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்திலேயே இவ்வாறு தெரிவித்த சாணக்கியன் எம்.பி., மேலும் பேசுகையில்,

“மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒருசில பகுதிகள் மேய்ச்சல் தரைகள் என இதுவரை வர்த்தமானி வெளியிடப்படவில்லை.

இந்த மேய்ச்சல் தரைப் பிரச்சினை தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் முறையாகச் செயற்படவில்லை. இதனால் பால் உற்பத்தி தொழிற்துறையும் வீழ்ச்சியடைந்து செல்கின்றது.

பால் உற்பத்தியாளர்கள் மேய்ச்சல் தரை இல்லாத காரணத்தால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

மயிலந்தனைப் பகுதியில் அத்துமீறிய வகையில் ஒரு தரப்பினர் கூடாரமிட்டுள்ளார்கள். இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராகவே நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தோம்.

இவர்களை மீண்டும் அழைத்து வருவதில்லை எனப் பொறுப்பான தரப்பினர் குறிப்பிட்டதன் பின்னரே வழக்கை மீளப் பெற்றோம்.



தற்போது மீண்டும் அவர்கள் அங்கு வந்துள்ளனர். எனவே, நாங்கள் மீண்டும் வழக்குத் தாக்கல் செய்ய நேரிடும்” - என்றார்.

இதன்போது எழுந்த விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர,

“இந்த விடயம் தொடர்பில் மகாவலி அதிகார சபைக்கும், கிழக்கு மாகாண ஆளுநருக்கும் அறிவிக்கின்றோம். இந்த விடயத்தில் உணர்வு பூர்வமாகவும், பிரச்சினையற்ற வகையிலும் தீர்வு காணுமாறு ஆளுநருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கின்றோம்” - என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய சாணக்கியன் எம்.பி.,

“உத்தியோகபூர்வமான அறிவிப்பின் ஒரு பிரதியை எனக்கும் தாருங்கள். அதனை அரச அதிபருக்கு வழங்க முடியும்.

சேதன பசளை உற்பத்தி என ஒதுக்கப்பட்ட 5 ஏக்கர் நிலப்பரப்பு அரசியல் தரப்பினரின் நெருக்கமானவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எனவே, இது குறித்து கவனம் செலுத்த வேண்டும்” - என்றார்.

(அ)




# நவீன சீதை சிறுகதை நூல் திருமலையில் வெளியீடு

திருமலை, ஒக். 05

கவிச்சுடர் சிவரமணியின் நவீன சீதை சிறுகதை நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு திருகோணமலை நகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதன் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வின் அதிதிகளாக பேராசிரியர் பாலசுகுமார், திருகோணமலை வலயக் கல்விப்பணிப்பாளர் சி. சிறிதரன், அரசியல் ஆய்வாளர் ஆ. யதீந்திரா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நூலின் பிரதியினை நூலாசிரியர் கவிச்சுடர் சிவரமணி கிழக்கு மாகாண இலங்கை வங்கியின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் ந.து.ரகு ராமுக்கு வழங்கி வெளியீட்டு வைத்தார்.

(அ)

# கிழக்கில் கலை, இலக்கிய மன்றங்களுக்கு புத்துயிர்!

## மாகாணப் பணிப்பாளர் நடவடிக்கை

நிந்தவூர், ஒக். 05

கிழக்கு மாகாணத்திலுள்ள கலை, இலக்கிய மன்றங்களை இயங்கும் நிலை மன்றங்களாக இயங்கச் செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரண்யா சுதர்ஸன் இதற்கான செயல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

இந்த கலை, இலக்கிய மன்றங்கள் உறங்கு நிலையிலில்லாது எதிர்காலத்தில் உயிரோட்டமுள்ள, செயற்திறன் மிக்க மன்றங்களாக இயங்குவதற்கான ஆக்க பூர்வ நடவடிக்கைகளைப் பணிப்பாளர் சரண்யா எடுத்து வருகின்றார்.

இதற்கான ஆரம்ப நடவடிக்கையாக கிழக்கில் இயங்கி வரும் கலை, இலக்கிய மன்றங்களை மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் ஏற்கனவே திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் மீளவும் பதிவை புதுப்பிப்பதற்கும், இதுவரை பதிவு செய்யப்படாத மன்றங்களை புதிதாக பதிவு செய்வதற்கும் பணிப்பாளரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிழக்கிலுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் திணைக்கள கலாச்சார உத்தியோகத்தர்களின் அனுசரணையுடன் இதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படவுள்ளன.

இதேவேளை கலை மற்றும் இலக்கிய மன்றங்களை புதுப்பித்தல் மற்றும் புதிதாக பதிவு செய்யும் போது ஆகக் குறைந்தது இருபது அங்கத்தவர்கள் மன்றத்தில் அங்கத்துவம் பெற்றிருக்க வேண்டுமென்றும்,



மன்ற நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் மற்றும் தொழில் விவரங்களை மன்ற அறிக்கையில் உள்ளடக்கப்படவேண்டுமெனவும் மாகாணப் பணிப்பாளர் சரண்யா சுதரஸன் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் மன்றங்களினால் முன்னெடுப்புக்கள், நிகழ்ச்சிகள் மற்றும் மாதாந்த கூட்டங்கள் நடத்தப்படும் பொழுது உரிய பிரிவு கலாசார உத்தியோகத்தருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு கலாசார உத்தியோகத்தர்கள் கூட்டங்களில் கலந்து கொள்வதுடன்,

அழைப்புக்களின் பிரதியினை மாகாண பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல்வேண்டும் எனவும் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இத்தகைய முறைப்படி செயற்படாத மன்றங்களின் பதிவுகள் உடனடியாக இரத்துச் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ-06)

# எதிர்காலத்துக்கு ஏற்றவர்களாக சிறுவரை புடம் போடவேண்டும்

நிந்தவூர், ஒக். 05

“நாட்டின் வருங்கால பிரஜைகளான இன்றைய சிறுவர்கள், எதிர்காலத்திற்கு ஏற்றவாறு புடம்போடப்பட வேண்டும். இதனைப் பொறுப்புணர்ந்து நாம் முன்னெடுக்க வேண்டும்”

-இவ்வாறு, நிந்தவூர் பிரதேச சபைத் தவிசாளரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினருமான எம்.ஏ.எம்.தாஹிர் கூறினார்.



நிந்தவூர் அமீர்மேசா ஞாபகார்த்த பொது நூலகத்தினால், தேசிய வாசிப்புமாத நிகழ்ச்சித்திட்டத்தின் ஓர் அங்கமாக ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச சிறுவர் தின நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கொண்டவாறு கூறினார்.

நூலகர் ஜனாபா. நசீறா அப்துல் லதீப் தலைமையில், நிந்தவூர் சிறுவர் பூங்கா திறந்த வெளி அரங்கில் நிகழ்வு இடம்பெற்றது.

நிந்தவூர் பிரதேச சபை மற்றும் நெல்லித்தீவு ஹிக்மா பாலர் பாடசாலை என்பவற்றின் இணை அனுசரணையுடன் நிகழ்வு இடம்பெற்றதுடன், நிகழ்வில் பாலர்கலை நிகழ்வுகள் பலவும் இடம் பெற்றன.

தவிசாளர் தாஹிர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

சிறுவர்களின் முக்கியத்துவம், அவர்களை எதிர்கால நற்பிரஜைகளாக உருவாக்க வேண்டியதன் அவசியம் என்பவற்றை உணர்த்தும் வகையில் சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்படுகின்றது.

இந்த சந்தர்ப்பத்தில் சிறுவர்கள் மீதான பார்வையும், அவர்கள் மீதான கவனமும் கொண்டவர்களாக நாம் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

இதன் மூலம் ஒழுக்கமான விழுமியமிக்க சமூகத்தை உருவாக்கும் குறிக்கோளுடனான இலக்கில் பயணிப்பதும் அவசியமாகும்.

இன்று நாட்டின் பொருளாதார நெருக்கடி சிறுவர்களின் வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள துரதிஸ்ட நிலமை உள்ளது.

நாட்டின் எதிர்காலப்பிரஜைகளான சிறுவர்களின் இயல்பு வாழ்க்கை பறிக்கப்பட்ட நிலைமையும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

எனவே சிறார்களின் வாழக்கை சிறப்பானதாக அமையவும், உரிமைமிக்கவர்களாகவும் வாழ நாம் வழிகாட்டவேண்டும். அத்துடன் எதிர்காலத்திற்கு ஏற்றவர்களாக சிறுவர்கள் இப்போதிருந்தே புடம் போடப்பட வும் நாம் ஆவன நடவடிக்கைகளையும், செயற் திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும்-என்றார். (அ-06)

# ஈரான் போராட்டத்துக்கு காரணம் அமெரிக்காவும் இஸ்ரேலும்தான்!

## உயர் தலைவர் அயதுல்லா குற்றச்சாட்டு



தெஹ்ரான், ஒக். 05

பொலிஸ் காவலில் இருந்தபோது பெண் ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து நாட்டில் நடந்த போராட்டங்களுக்கு அமெரிக்காவும் இஸ்ரேலும்தான் காரணம் என ஈரானின் உயர் தலைவர் அயதுல்லா அலி கமேனி குற்றம் சாட்டியுள்ளார்.

அமைதியின்மை குறித்த தனது முதல் பொதுக் கருத்துக்களில், அயதுல்லா அலி கமேனி, ஈரானின் பரம எதிரிகள் மற்றும் அவர்களின் நட்பு நாடுகளால் கலவரங்கள் தூண்டப்பட்டதாக அவர் கூறினார்.

ஒரு தசாப்த காலமாக தனது ஆட்சிக்கு எதிர்ப்புகள் மிகப்பெரிய சவாலாக உள்ளன. மேலும் பாதுகாப்புப் படைகள் மேலும் தயாராக இருக்கவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அமைதியான போராட்டக்காரர்கள் மீதான வன்முறை ஒடுக்குமுறை தீவிரமடைகிறது என்ற அறிக்கைகள் குறித்து தான் கடுமையான கவலை அடைவதாக ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் 13ஆம் திகதி வடமேற்கிலுள்ள சாகேஸ் நகரை சேர்ந்த 22 வயதான குர்து இன பெண்ணான மாசா அமினி, தெஹ்ரானில் அவருடைய சகோதரரோடு இருந்தபோது, தலைமுடியை ஹிஜாப்பால் மறைப்பது மற்றும் தளர்வான ஆடையால் முழு உடலையும் மறைக்க உத்தரவிடும் ஹிஜாப் சட்டத்தை மீறியதாக ஹிஜாப் ஆடை ஒழுங்கு முறையை அமுலாக்கும் பொலிஸ்துறையால் கைதுசெய்யப்பட்டார்.

பொலிஸ்துறையினரின் கட்டுப்பாட்டில் இருந்தபோது அமினியின் தலையில் பொலிஸ் துறையினர் பிரம்பால் அடித்ததாகவும், பொலிஸ்துறையினரின் வாகனத்தில் அவரது தலையைக் மோதச் செய்ததாகவும் தகவல்கள் உள்ளதாக ஐ.நா மனித உரிமைகள் தற்காலிக உயர் ஆணையர் நடா அல்-நஷிப் தெரிவித்தார்.

தாக்குதலுக்கு பிறகு 3 நாட்கள் கோமா நிலையில் துன்பப்பட்டு, மாசா அமினி, மருத்துவமனையில் உயிரிழந்தார்.

இந்தக் குற்றச்சாட்டை மறுக்கும் பொலிஸ் துறையினர், அவருக்கு திடீர் இதய செயலிழப்பு ஏற்பட்டதாகக் கூறுகின்றனர். ஆனால், அமினி நல்ல ஆரோக்கியத்துடன் இருந்ததாக அவரது குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

பொலிஸ்துறையினரின் கட்டுப்பாட்டில் இருந்தபோது உயிரிழந்ததன் விளைவாக அங்கு நடந்துவரும் போராட்டத்தைப் பெண்கள் முன்னின்று நடத்தி வருகின்றனர். அங்கு 150க்கும் அதிகமான இடங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த போராட்டங்களின் போது இதுவரை 92க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதோடு, ஆயிரத்துக்கும் அதிகமானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (அ)

# எதிர்காலத்தை எண்ணி அஞ்சும் இளம் தலைமுறை

**ஆய்வில் தகவல்**

லண்டன், ஒக். 05

பிரித்தானியாவில் உள்ள மூன்றில் இரண்டு பங்கு இளைஞர்கள் தங்கள் தலைமுறையின் எதிர்காலத்தைப் எண்ணி அஞ்சுவதாக ஒரு ஆய்வு கண்டறிந்துள்ளது.

16 முதல் 25 வயதுடையவர்களில் கிட்டத்தட்ட பாதி பேர் (49 சதவீதம்) எதிர்காலத்தைப் பற்றிய தினசரி கவலையை உணர்ந்தனர். அதே நேரத்தில் 59 சதவீத பேர் தங்கள் தலைமுறையின் எதிர் காலத்தைப் பற்றி அஞ்சுகின்றனர்.

தி பிரின்ஸ் அறக்கட்டளையின் ஆராய்ச்சி இதை வெளிப்படுத்தியது. தொண்டு நிறுவனத்தின் 'கிளாஸ் ஒப் கொவிட்' பிரசாரத்தின் ஒரு பகுதியாக இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இது தொற்றுநோயால் இளைஞர்களின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் நல்வாழ்வு எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த தொடங்கப்பட்டது.

இளவரசர் அறக்கட்டளையின் தலைமை நிர்வாகியான ஜொனாதன் டவுன்செண்ட், 'வணிகங்கள், அரசாங்கம், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு இளைஞர்களுக்கு ஒரு நேர்மறையான எதிர்காலத்தை உருவாக்க உதவுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

பிரித்தானியா முழுவதிலும் உள்ள 2,002 இளைஞர்களிடம் தொற்றுநோய்க்குப் பிறகு தங்கள் வாழ்க்கை மற்றும் தொழில் குறித்து அவர்கள் எவ்வாறு கட்டுப்பாட்டில் உள்ளனர் என்று கருத்து கணிப்பில் வினவப்பட்டது.

பதிலளித்தவர்களில், 45 சதவீதம் பேர் சமீபத்திய அரசியல் மற்றும் பொருளாதார நிகழ்வுகள் குறித்து தினசரி அடிப்படையில் கவலைப்படுவதாகக் கூறியுள்ளனர். மேலும் பாதிக்கும் மேற்பட்டவர்கள் 2020ஆம் ஆண்டு முதல் எதிர்காலத்திற்கான தங்கள் நம்பிக்கையைக் குறைத்துவிட்டதாகக் கூறியுள்ளனர்.

அதே விகிதாச்சாரம் கணிக்கப்பட்ட மந்தநிலை அவர்களின் வேலைகளைப் பற்றி கவலைப்படுவதாகவும் கூறுகிறது. மூன்றில் ஒரு பகுதியினர் தங்கள் தொழில் இலக்குகளை எட்டுவார்கள் என்று நம்புவதில்லை. (அ)



# மருத்துவத்திற்கான நோபல் பரிசு சுவீடன் விஞ்ஞானி ஸ்வந்தேயுக்கு!

ஒஸ்லோ, ஒக். 05

சுவீடன் விஞ்ஞானி ஸ்வந்தே பாபோ மருத்துவத்தில் இவ்வாண்டுக்கான நோபல் பரிசை வென்றுள்ளார்.

மனிதப் பரிணாம வளர்ச்சி குறித்த மரபணு தொடர்பான கண்டுபிடிப்புகளுக்காக அவர் அங்கீகாரத்தைப் பெற்றார்.

"எல்லா உயிருள்ள மனிதர்களையும் அழிந்துபோன ஹோமினின்களிலிருந்து வேறுபடுத்தும் மரபணு வேறுபாடுகளை வெளிப்படுத்துவதன் மூலம், அவரது கண்டுபிடிப்புகள் நம்மை தனித்துவமான மனிதர்களாக ஆக்குவதற்கான அடிப்படையை வழங்குகின்றன" என்று நோபல் குழு கூறியது.

ஏற்கெனவே உயிர்-ரசாயனத்துறையில் நோபல் பரிசு வென்ற விஞ்ஞானி சுனே பெர்க்ஸ்ட்ரோமின் மகன் பாபோ. (அ)

# ஜப்பான் மீது ஏவுகணை ஏவியது வடகொரியா!

ரோக்கியோ, ஒக். 05

ஜப்பானின் வடக்குப் பகுதியின் மீது வட கொரியா, பாலிஸ்டிக் ஏவுகணையை ஏவியதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை உள்ளூர் நேரப்படி 07:29 மணிக்கு ஜப்பானிய அரசாங்கத்திடமிருந்து வெளியான எச்சரிக்கையில், ஹொக்கைடோ தீவில் உள்ள மக்களுக்கு விமானம் மற்றும் ரயில் பயணங்களை தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

வடகிழக்கு ஹொக்கைடோ மற்றும் அமோரி பகுதிகளில் ரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

ஜப்பானில் இருந்து சுமார் 3,000 கிமீ (1,860 மைல்) தொலைவில் உள்ள பசிபிக் பெருங்கடலில் ஏவுகணை விழுந்ததாகவும், இது தொடர்பாக எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என ஜப்பானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானிய கடலோரக் காவல்படை மற்றும் தென் கொரியாவின் கூட்டுப் படைத் தலைவர்களால் கண்டறியப்பட்ட ஏவுகணை, 4,500 முதல் 4,600 கிமீ (2,800-2,850 மைல்கள்) வரை அதிகபட்சமாக 1,000 கிமீ (620 மைல்கள்) உயரத்திற்கு பறந்ததாக தெரிவித்தனர்.

சீனாவுடனான எல்லைக்கு அருகே நாட்டின் வடபகுதியில் இருந்து ஏவப்பட்ட இந்த ஆயுதம், பசிபிக் பெருங்கடலில் விழுவதற்கு முன்பு சுமார் 22 நிமிடங்கள் வானில் பறந்தது.

ஜப்பானின் பிரதமர் ஃபுமியோ கிஷிடா, இந்த நடவடிக்கைகளை கடுமையாகக் கண்டித்து, ஏவுதலை வன்முறை நடத்தை என்று விபரித்தார். மேலும் ஜப்பானிய அரசாங்கம் அதன் தேசிய பாதுகாப்பு சபையின் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

எந்தவொரு முன் எச்சரிக்கையும் ஆலோசனையும் இன்றி மற்ற நாடுகளை நோக்கி ஏவுகணைகளை பறக்கவிடுவது சர்வதேச விதிமுறைகளுக்கு முற்றிலும் முரணானது.

கடந்த 2017ஆம் ஆண்டுக்குப் பிறகு ஜப்பான் மீது வடகொரியா ஏவுவது இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ரஷ்யாவுடன் இணைக்கப்பட்ட கெர்சான் பிரதேசத்துக்குள் உக்ரைன் படை முன்னேற்றம்!

கீவ், ஒக். 05

ரஷ்யாவுடன் அண்மையில் உத்தியோகபூர்வமாக இணைக்கப்பட்ட, கெர்சான் பகுதியில் உக்ரைன் படையினர் முன்னேற்றம் கண்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைனின் மிகக் கடுமையான போர் முனைகளில் ஒன்றாக திகழும் தெற்கே அமைந்துள்ள கெர்சான் பிராந்தியத்தில் கெர்ஷெனிவ்கா பகுதியிலுள்ள திசைக்காட்டி கம்பத்தில் உக்ரைன் தேசியக் கொடி பறக்கும் படங்கள் தற்போது வெளியாகியுள்ளன.

இதேவேளை, தெற்கு உக்ரைனில் ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு மூலோபாய நகரமான கெர்சனின் வட கிழக்கே டினீப்பர் ஆற்றின் மீது உக்ரைனிய துருப்புக்கள், ரஷ்ய நிலைகளை தாக்கியுள்ளன.

இந்த முன்னேற்றம் ரஷ்ய இராணுவம் மற்றும் பிராந்தியத்தில் ரஷ்யாவால் நிறுவப்பட்ட அதிகாரிகளால் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து, கெர்சான் பகுதியில் உக்ரைன் படையினர் 'சற்று ஆழமாக' முன்னேறியுள்ளதாக அந்தப் பிராந்தியத்தில் ரஷ்ய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரி கிரில் ஸ்ட்ரெமுசோவ் ஒப்புக்கொண்டுள்ளார்.

எனினும், அந்தப் பகுதியில் நிலைமை கட்டுக்குள் இருப்பதாகவும், பாதுகாப்பு இயந்திரங்கள் சரியான முறையில் செயற்படுவதாகவும் அவர் கூறினார். (அ)



# மகளிர் ஆசியக் கிண்ணம் இலங்கை அணி வெற்றி!

சில்ஹெட், ஒக். 06

சில்ஹெட்டில் நடைபெற்று வரும் மகளிர் இருபது 20 ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியின் 4ஆவது ஆட்டத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தை டக்வேர்த் லூயிஸ் முறைமையில் 11 ஓட்டங்களால் இலங்கை வெற்றிகொண்டது.



இரண்டாவது தடவையாக துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறிய இலங்கை 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 109 ஓட் டங்களை மாத்திரமே பெற்றது.

அணித் தலைவி சமரி அத்தப் பத்து துடுப்பாட்டத்தில் பிரகாசிக் கத் தவறிவருவது அணிக்கு நெருக் கடியைக் கொடுப்பதாக அமைகி றது.

ஹர்ஷிதா சமரவிக்ரம (37), நிலக்ஷி டி சில்வா (19), அனுஷ்கா சஞ்சீவனி (17) ஆகிய மூவரே இரட்டை இலக்க எண்ணிக்கை களைப் பெற்றனர்.

ஐக்கிய அரபு இராச்சிய பந்து வீச்சில் வைஷ்ணவி மஹீஷ் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை யும் மஹிகா கோர் 21 ஓட்டங் களுக்கு 3 விக்கெட்களையும் சமய்ரா தார்ணிதர்கா 18 ஓட் டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

110 ஓட்டங்கள் என்ற சுமாரான வெற்றி இலக்கை நோக்கி பதி லுக்கு துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு இராச்சியம் 3 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 17 ஓட்டங்களைப் பெற்றி ருந்தபோது சீரற்ற காலநிலை காரணமாக ஆட்டம் தடைப் பட்டது.

சுமார் ஒன்றரை மணித்தியா லத்தின் பின்னர் ஆட்டம் தொடர்ந்தபோது ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெற்றி இலக்கு டக்வேர்த் லூயிஸ் முறைமையின் பிரகாரம் 11 ஓவர்களில் 66 ஓட்டங்கள் என நிர்ணயிக்கப்பட் டது. ஆனால், ஐக்கிய அரபு இராச் சியம் 11 ஓவர்கள் நிறைவில் 7 விக் கெட்களை இழந்து 54 ஓட்டங் களை மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது.

இலங்கை பந்துவீச்சில் காவிஷா டில்ஹாரி, இனோக்கா ரணவீர ஆகிய இருவரும் ஒரே மாதிரியாக 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை வீழ்த்தினர். (ஐ)



## டெல் அவிவ் ஓப்பன் ஜொகோவிச் சம்பியன்!

டெல் அவிவ், ஒக். 06

டெல் அவிவ் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் உல கின் முதல்நிலை வீரரான ஜொகோவிச் சம்பியன் பட் டத்தை வென்றார்.

டெல் அவிவ் வோட்டர்ஜென் ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி இஸ்ரேலில் நடந்தது. இதன் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் முன்னாள் முதல்நிலை வீரரும், தற்போது தரவரிசையில் 7ஆவது இடத்தில் இருப்பவருமான சேர்பியாவின் நோவக் ஜொகோவிச், குரோஷியாவின் மரின் சிலிச்சை எதிர்கொண்டார்.

தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜொகோவிச் 6-3, 6-4 என்ற நேர்செற்றில் மரின் சிலிச்சை தோற்கடித்து சம்பியன் பட்டத்தை வசப் படுத்தினார். இந்த வெற்றியை பெற அவருக்கு 1 மணி 34 நிமிடமே தேவைப்பட்டது.

35 வயதான ஜொகோவிச் இந்த ஆண்டில் வென்ற 3ஆவது பட்டமாகும். இதன் மூலம் இந்த தொடரில் கடினதரை (உள்ளரங்க போட்டி), களிமண்தரை (ரோம் ஓப்பன்), புல்தரை (விம்பிள்டன்) ஆகியவற்றில் நடந்த போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற முதல் வீரர் என்ற பெருமையை பெற்றார்.

ஒட்டுமொத்தத்தில் அவர் கைப்பற்றிய 89ஆவது சர்வதேச ஒற்றையர் பட்டம் இதுவாகும்.

இந்த போட்டியில் வென்றதன் மூலம் இத்தாலியில் அடுத்த மாதம் நடைபெறும் "முதல்-8" வீரர்கள் மட்டும் பங்கேற்கும் ஏ.டி.பி. இறுதி சுற்று போட் டிக்கு ஜொகோவிச் தகுதி பெற்றார். (ஐ)

## விமானத்தை தவறவிட்ட வீரர் அணியிலிருந்தே நீக்கப்பட்டார்!



சென். லூசியா, ஒக். 05

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிரடி வீரர் ஹெட்மயர் அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் விமா னத்தை தவறவிட்டதால், இருபது - 20 உலகக் கிண் ணத் தொடரிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இருபது - 20 உலகக்கிண்ணத் தொடர் வரும்16 ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் தொடங்கி நடைபெற வுள்ளது.

இதற்காக அணிகள் அவுஸ்திரேலியாவுக்கு பயணமாகி வருகின்றன. இந்த நிலையில், மேற்கிந்தி யத்தீவுகள் அணியில் அதிரடி ஆட்டக்காரர் ஷிம்ரன் ஹெட்மயர் இருபது -20 உலகக்கிண்ணத்துக்கான அணியில் இடம்பெற்றிருந்த நிலையில், போட்டியில் பங்கேற்க அவுஸ்திரேலியாவுக்கு செல்லக்கூடிய விமானத்தை தவறவிட்டார்.

இதன் காரணமாக அவர் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இது தொடர்பாக அதன் இயக்குநர் ஜிம்மி அடம்ஸ் கூறுகையில்,

"குடும்பக் காரணங்களுக்காக ஹெட்மயரின் விமான பயணத்தை சனிக்கிழமையிலிருந்து திங்கட் கிழமைக்கு மாற்றினோம். ஆனால், அவர் இன்று புறப்படும் விமானத்தையும் பிடிக்க விமான நிலை யத்திற்கு சரியான நேரத்தில் செல்ல இயலாது என்று தெரிவித்துவிட்டார். மேலும் அவர் அவுஸ்தி ரேலியாவுக்குப் பயணம் செய்வதில் தாமதங்கள் மற்றும் சிக்கல்கள் இருந்தால் வேறு வழியில்லாமல் அவரை அணியில் இருந்து நீக்கிவிட்டோம் என்று தெரிவித்தார். ஹெட்மயருக்கு பதிலாக ஷமர் ப்ரூக்ஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க முடியாதது வருத்தம்

### ஜஸ்பிரித் பும்ரா



புதுடில்லி, ஒக். 05

இம்முறை இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்கேற்க முடியாதது வருத்தமளிக்கிறது என்று ஜஸ்பிரீத் பும்ரா ருவிற்றரில் தெரிவித்துள்ளார்.

20 ஓவர் உலகக்கிண்ணம் கிரிக்கெட் போட்டி ஒக்ரோபர் 16ஆம் திகதி முதல் நவம்பர் 13ஆம் திகதி வரை அவுஸ்திரேலி யாவில் நடைபெறுகிறது. உலகக் கிண்ணப் போட்டிக்கான இந்திய அணியில் இருந்து முன்னணி வேகப்பந்து வீரரான ஜஸ்பிரீத் பும்ரா முதுகுவலி காயம் காரண மாக விலகியதாக கடந்த சில தினங்களுக்கு முன் தகவல் வெளி யாகி இருந்தது.

இந்த நிலையில் 20 ஓவர் உலகக்கிண்ணத் தொடரிலிருந்து ஜஸ்பிரீத் பும்ரா விலகியுள்ளதாக பிசிசிஐ நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இது தொடர் பாக பி. சி. சி. ஐ. வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"ஐசிசி ஆடவர் இருபது - 20உலகக் கோப்பை அணியில் இருந்து இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும் ராவை பி. சி. சி. ஐ. மருத்துவக் குழு விலக்கியுள்ளது. விரிவான மதிப்பீடு மற்றும் நிபுணர்களுடன் கலந்தாலோசித்து இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஜஸ்பிரித் பும்ராவுக்குப் பதிலாக மாற்று வீரர் விரைவில் அறிவிக்கப்படுவார் என பிசிசிஐ தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ஜஸ்பிரித் பும்ரா வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில் கூறியிருப்பதாவது:-

"காயம் காரணமாக இம்முறை இருபது - 20 உலகக் கிண்ணம் போட்டிகளில் நான் பங்கேற்க முடியாதது வருத்தமளிக்கிறது. உங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி. உடல்நிலை சீரானதும் இந்திய அணிக்கு என்னுடைய ஆதரவை அளிப்பேன்." என்று பதிவிட்டுள்ளார். (ஐ)

# குச்சவெளி பாலர் பாடசாலையில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள்



திருமலை, ஒக். 05

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி குச்சவெளி பிரதேச சபையின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தின இந்நிகழ்வு தவிசாளர் ஏ.முபாறக் தலைமையில் குச்சவெளி பாலர் பாடசாலையில் இடம்பெற்றது.

குச்சவெளி பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் சிறுவர்களுக்கென சுமார் 7 இலட்சம் ரூபாய் நிதியில் அமைக்கப்பட்ட சிறுவர்கள் விளையாட்டு மையத்தை தவிசாளர் ஏ.முபாறக் திறந்து வைத்தார்.

சிறுவர்களுக்கான விளையாட்டு மையம் ஒன்றை அமைத்துத் தருமாறு பாலர் பாடசாலை நிர்வாகத்தினர் தவிசாளர் ஏ.முபாறகிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக, அவரின் அயராத முயற்சியினால் சகல வசதிகளுடன் சிறுவர்களுக்கான விளையாட்டு மையம் அமைக்கப்பட்டு சர்வதேச சிறுவர் தினத்தன்று திறந்து வைத்ததன் பின்னர், பாலர் பாடசாலையின் நிர்வாகத்தினரிடம் உத்திய பூர்வமாக கையளிக்கப் பட்டது.

இந்நிகழ்வில், உதவித் தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை செயலாளர் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர். (அ)



# சாய்ந்தமருது மாணவர்கள் நடத்திய போதைப்பொருள் எதிர்ப்பு ஊர்வலம்

அம்பாறை, ஒக்.05

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலைமாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருள் எதிர்ப்புப் பேரணி பாடசாலையிலிருந்து ஆரம்பித்து சாய்ந்தமருதிலுள்ள முக்கிய பிரதான வீதிகளின் ஊடாக வலம் வந்தது.

இந்நிகழ்வு, பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம் இல்லியாஸ் தலைமையில், பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரிய ஆசிரியைகள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பூரண அனுசரணையுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

போதைப்பொருள் பாவனை அதிகரித்து வரும் நிலையில், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்பேரணியின் போது, 'போதை மேல் போதை கொண்டால் அழிவே கூடும்', 'ஒழிப்போம் ஒழிப்போம் போதையை ஒழிப்போம்', 'புகைத்தலைத் தடுப்போம், மது பாவனையை ஒழிப்போம், ஐஸ் பாவனையைத் தடுப்போம், போதைக்கு எதிராக குரல் கொடுப்போம்', 'போதையில் மோதி பாதையை மாற்றாதே!' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளைச் சுமந்த வண்ணம் மாணவர்கள் சத்தமாக குரல் எழுப்பியும் வீதியில் வலம் வந்தனர்.

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு 'சகல பிள்ளைகளுக்கும் சிறந்ததொரு எதிர்காலம்' எனும் தொனிப் பொருளில் இடம் பெற்ற இச்சிறுவர் தின நிகழ்வில், போதைப் பொருளுக்கான இந்த எதிர்ப்புப் பேரணி பாடசாலையில் கல்வி கற்கும் தரம் 5 மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

சகல மாணவர்களும் அதிபர் உட்பட்ட ஆசிரியர் குழாத்தினால் மாலை அணிவித்து இனிப்பு வழங்கி வரவேற்கப்பட்டதோடு, தரம் 1 தொடக்கம் தரம் 2 மாணவர்களுக்காக பலூன் உடைத்தல், சமநிலை ஓட்டம், போத்தலில் நீர் நிரப்புதல், சங்கீதக் கதிரை,பந்து மாற்றுதல் போன்ற போட்டிகளும், தரம் 3 தொடக்கம் தரம் 4 மாணவர்களின் ஓவியக் கண்காட்சி மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (அ)



# போதைப்பொருள் வியாபாரிகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை!

## ஆலையடிவேம்பில் மாணவர்கள் போராட்டம்

மட்டக்களப்பு, ஒக். 05

போதைப்பொருள் விற்பனை செய்கின்றவர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் எடுக்கப்படுவதில்லை என கண்டித்து ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சகல பாடசாலைகளிலும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.



இப்போராட்டத்தில் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், சமூக நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

சிறுவர் தினத்துக்கு இணையாக இடம்பெற்ற இக்கவனயீர்ப்பு போராட்டத்தில் போதைப்பொருளை இல்லாதொழிக்கவேண்டியும் அதை விநியோகம் செய்கின்றவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியும் மாணவர்களும் பெற்றோர்களும் பல்வேறு வாசகங்களை ஏந்திய சுலோக அட்டைகளை தாங்கி நின்றனர்.

அத்தோடு கோசங்களை எழுப்பியவாறும் பாடசாலைக்கு முன்பாக ஒன்றுகூடி தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

கடந்த சில காலமாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுகின்றவர்கள் மாணவர்களை இலக்கு வைத்து பாடசாலைகளில் போதைப்பொருளை விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றிலும் வழக்குகள் தொடரப்பட்டன.

இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனிநபர் ஒருவர் பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்து ஆசிரியர்களை அச்சுறுத்தியதாக தெரிவிக்கப்பட்டு 15 ஆசிரியர்கள் இணைந்து கையொப்பமிட்டு அக்கரைப்பற்று பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். ஆனாலும் அவ்விடயம் தொடர்பில் உரிய நபர் கைது செய்யப்படாது அவரை பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு அழுத்தங்கள் ஆசிரியர்கள் மீது பிரயோகிக்கப்பட்டதாகவும் இதனை அடிப்படையாக வைத்து பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தி ஆசிரியர்களிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இதனால் தங்களுக்கு பாதுகாப்பில்லை என்பதுடன் மாணவர்களும் உள ரீதியாக பாதிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இதனை அடிப்படையாக வைத்தே ஆலையடிவேம்பு பிரதேசத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் இக்கவனயீர்ப்பு முன்னெடுக்கப் பட்டது.

அவ்விடத்திற்கு சென்ற ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் மற்றும் திருக்கோவில் வலயக் கல்வி அலுவலக உதவிக்கல்விப்பணிப்பாளர் கீ.கமலமோகனதாசன் ஆகியோரிடமும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

இங்கு போதைப்பொருளுக்கு எதிரான வீதி நாடகமொன்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# சாதனை மாணவர்கள் கௌரவிப்பு

அம்பாறை, ஒக்.05

கடந்த ஆண்டு வெளியான பெறுபேறுகள் அடிப்படையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும், மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் வைபகமும், சிறுவர்களை ஊக்கப்படுத்தும் சிறுவர்தின நிகழ்வுகளும் கல்முனை கல்வி வலய காரைதீவு கோட்டத்தை சேர்ந்த மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் அதிபர் எம்.ஐ.எம் அஸ்மி தலைமையில் இரு கட்டங்களாக கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.



அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவினால் கடந்த ஆண்டு வெளியான பெறுபேறுகள் அடிப்படையில் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியெய்திய மாணவர்கள் இந்நிகழ்வில் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பாலியல் கல்வி மற்றும் பாலியல் தொற்றுநோய்ப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.என்.எம்.தில்ஷாத் கலந்து கொண்டார்.(அ)

## நாடு மீண்டெழு...

மேலும், “நாட்டின் ஆட்சியையே தீர்மானித்த சிறீ லங்கா சுதந்திரக் கட்சி இன்று பைத்தியக்காரர்கள் சிலரின் கைகளிலேயே உள்ளது. இதற்கு விரைவில் முடிவு கட்டியே தீருவேன்.”

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

“இந்த நாட்டில் இனப்பிரச்னை இருப்பதால்தான் மூன்று தசாப்த காலங்கள் போர் நீடித்தது. இந்தக் கொடிய போரால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். அதனால்தான் அவர்கள் சர்வதேசத்திடம் நீதி தேடி அலைகின்றார்கள். எனவே, தேசிய இனப்பிரச்னைக்குத் தீர்வு கண்டால்தான் நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட்டு அனைவரும் ஓரணியில் ஒரே திசையில் பயணிக்க முடியும்.

“தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணாவிட்டால் சிங்களவர்கள் ஒரு திசையிலும், தமிழ் - முஸ்லிம் மக்கள் வேறொரு திசையிலும் பயணித்துக் கொண்டே இருப்பார்கள். இதனால்தான் நாளுக்கு நாள் பிரச்சினைகள் உருவாகின்றன கருத்து மோதல்களும் ஏற்படுகின்றன.

“இந்த நிலைமை மக்களுக்கும் அழகு அல்ல. நாட்டுக்கும் நன்மை அல்ல. எனவே, எந்த அரசு ஆட்சியில் இருந்தாலும் தேசிய இனப்பிரச்னைக்கு விரைந்து தீர்வுகாண வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியும், கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியும் வளமிக்க எமது நாட்டைச் சீரழித்துவிட்டது. ஒட்டுமொத்தத்தில் ராஜபக்ஷ குடும்பமே எமது நாட்டு வளங்களைச் சுரண்டித் தின்றுவிட்டனர்.

ராஜபக்ஷக்களின் ஆட்சிக்கு ஆணை வழங்கிய மக்கள், தங்கள் குற்ற உணர்வை உணர்ந்து கொதித்தெழுந்தமையால்தான் ராஜபக்ஷக்களின் யுகம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

எனினும், ஏதோவொரு வழியில் மீண்டும் தங்கள் ஆட்டங்களைக் காண்பிக்க ராஜபக்ஷவினர் முயல்கின்றனர். இதற்கு எவரும் துணைபோகக்கூடாது. அமைச்சரவையில் ராஜபக்ஷக்கள் எவரும் அங்கம் வகிக்க இடமளிக்கக்கூடாது.

விரைவில் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெற வேண்டும். நிலையான அரசு அமைய வெளியிலிருந்து எனது பங்களிப்பை வழங்க நான் தயாராகவுள்ளேன்.

எனது தந்தை, தாய் வளர்த்தெடுத்த சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை நான் இறுதி வரையில் பாதுகாத்தே வந்தேன். ஆனால், இன்று சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிலையைப் பார்க்கும் போது மிகவும் கவலையளிக்கின்றது.

மனநோயாளர் விடுதிகளில் இருக்க வேண்டியவர்கள் இன்று கட்சியின் தலைமைப் பதவிகளில் இருக்கின்றனர். இந்தக் கட்சிக்குள் ஜனநாயகம் இல்லை. கட்சியின் கொள்கைகள் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளன.

இதனால் திறமைமிக்க பலர் கட்சியிலிருந்து வெளியேறி வருகின்றனர். நாட்டின் ஆட்சியையே தீர்மானித்த சிறீ லங்கா சுதந்திரக் கட்சி இன்று பைத்தியக்காரர்கள் சிலரின் கைகளிலேயே உள்ளது. இதற்கு விரைவில் முடிவு கட்டியே தீருவேன் .- என்றார். (ஐ)

## மாணவர்களின்...

பொலிஸாரால் கலைத்து விரட்டப்பட்டது.

களனி பல்கலைக்கழகம் முன்பாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், சிவில் அமைப்பினர் மற்றும் சமூக சேவை அமைப்பினர் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

“அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் மீதான ஒடுக்கு முறையை நிறுத்து”, “சிறைப்பிடித்தாலும் நாங்கள் முன்னேறி வருவோம்”, “துப்பாக்கி பிரயோகம் செய்தாலும் நாம் வருவோம்”, “ரணில் அரசாங்கம் எமக்கு வேண்டாம்”, “மக்களாணையை பெற உடன் தேர்தலை நடத்து” என்ற கோஷங்களை போராட்டக்காரர்கள் எழுப்பினர்.

இந்நிலையில், அங்கு நின்ற பொலிஸார் வீதியை வழிமறித்து போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்பட வேண்டாம் என்று ஒலிவாங்கி மூலம் அறிவித்தனர்.

ஆனால், போராட்டக்காரர்கள் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்த நிலையில் பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். அத்துடன், நீர்த் தாரைப் பிரயோகத்தையும் செய்தனர்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட ஆர்ப்பாட்டாக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். இதனிடையே அவர்கள் பொலிஸாரின் நடவடிக்கைக்கு கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்தனர். (ஐ)

## 22ஆவது...

திங்கட்கிழமை மாலை அரசாங்கத்தின் பாராளுமன்ற குழு கூட்டம் நடநதது. இதன்போது, 22ஆவது திருத்தம் ஜனாபதியின் அதிகாரங்களை குறைக்கிறது என்று சுட்டிக்காட்டி பொதுஜன பெரமுன எம். பிக்கள் 22ஐ எதிர்த்தனர்.

இது தொடர்பில் பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் கருத்து வெளியிடுகையில்,

13ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையால் நாட்டின் ஒற்றையாட்சி தன்மை பாதுகாக்கப்பட்டது. எனவே, நிறைவேற்று அதிகார திருத்தம் ஒற்றையாட்சி தன்மையை பாதிக்கிறது. அரசமைப்பை துண்டுதுண்டாக மாற்றுவதை விட ஒட்டுமொத்தமாக மாற்றங்களை நாம் செய்ய வேண்டும்.

அரசமைப்பின் ஒற்றையாட்சி தன்மையை பாதுகாக்கும் வகையில் மட்டுமே ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும். தற்காலிகமாக அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யக்கூடாது. எனினும், பாராளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்குவதை எமது கட்சி எதிர்க்கவில்லை - என்றார்.

இதேசமயம், நாட்டின் பொருளாதாரம் புத்துயிர் பெற ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரங்கள் தேவைப்படுகின்றன என்று எஸ். பி. திஸநாயக்க எம். பி. தெரிவித்துள்ளார். அண்மைக் கால வரலாற்றில் சர்வாதிகார ஆட்சியாளர்களே தமது நாடுகளை அபிவிருத்தி செய்துள்ளனர். சிங்கப்பூர், சீனா, தென் கொரியா நாடுகள் இதற்கு உதாரணம் என்றும் அவர் கூறினார். (ஐ)

## எரிவாயு,...

லிற்றோ எரிவாயுவின் (12.5 கிலோ சிலிண்டர்) விலை 200 -300 ரூபாய் வரை குறைவடையவுள்ளது. இதே போன்று ஏனைய எரிவாயு சிலிண்டர்களின் விலைகளும் விகிதாசார அடிப்படையில் குறைக்கப்படவுள்ளன.

உலக சந்தையில் ஏற்பட்டுள்ள விலை வீழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இந்த விலைக் குறைப்பு செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஐ. எம். எவ்வுடன்...

யத்துடன் இறுதி உடன்பாடு எட்டப்படவில்லை. வரைவு ஒப்பந்தம் மட்டுமே எட்டப்பட்டதாக பிரதமர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இலங்கையுடன் உடன்பாடு எட்டப்பட்டதாக சர்வதேச நாணய நிதியம் மேற்கோள் காட்டுகிறது என்று விமல் வீரவன்ஸ இதன்போது தெரிவித்திருந்தார். (ஐ)

## பாராளுமன்றத்...

றிய சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, அரசாங்கத்தில் இருந்து விலகி, பாராளுமன்றில் சுயாதீனமாக செயல்படும் பெரும்பாலான உறுப்பினர்கள் கோப் மற்றும் கோபா குழுக்களுக்கு நியமிக்கப்படவில்லை. கோபா குழுவுக்கு சுயாதீன உறுப்பினர் சரித ஹேரத்தின் பெயரை எதிர்க்கட்சித் தலைவர் பரிந்துரை செய்தமை வரவேற்கத்தக்கது.

பாராளுமன்றில் எமது உரிமை தொடர்ந்து மறுக்கப்படுவதை பொறுமையுடன் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. மக்கள் பிரதிநிதிகள் என்ற ரீதியில் எமக்கான உரிமை எமக்கு வேண்டும். அத்துடன், எமது கருத்துச் சுதந்திரத்துக்கு வாய்ப்பளிக்க வேண்டும் - என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய நிமல் லான்ஷா, பாராளுமன்ற நடவடிக்கை நிலையியல் கட்டளைக்கமைய இடம்பெற வேண்டும். ஆகவே ஒரு விடயத்தை பிடித்துக்கொண்டு வாத பிரதிவாதங்கள் தொடர்வதை விடுத்து, சபை நடவடிக்கை முன்னெடுத்துச் செல்ல இடமளிக்க வேண்டும் அனைவருக்கும் சமவுரிமை வழங்கப்பட வேண்டும். வேறொன்றும் குறிப்பிடவில்லை. நான் அவரை குறிப்பிட்டேன் என தயாசிறி ஜயசேகர தொப்பியை அவர் தலையில் எடுத்து அணிந்துகொண்டார். தயாசிறி ஜய சேகர சிரேஷ்ட உறுப்பினராக இருந் தாலும், படித்தவராக இருந்தாலும், “முட்டாள்“. பாராளுமன்ற முறைமை தெரியாமல் “முட்டாள்“ போல் பேசுகிறார் என கடுமையாக சாடினார்.

அப்போது “முட்டாள்“ என்ற பதத்தை நீக்குங்கள் என சபாநாயகர் அறிவித்தார். இந்நிலையில் எழுந்து உரையாற்றிய எம். ஏ. சுமந்திரன், அவர் உரையின்போது “முட்டாள்“ என்ற சொற்பதத்தை பாவித்தார். அதனை நீக்குவது மாத்திரமல்ல, அவரை சபையில் இருந்து வெளியேற்றுங்கள் எனக் கூறினார்.

தொடர்ந்து மீண்டும் உரையாற்றிய தயாசிறி ஜயசேகர, நாங்கள் எதிர்க்கட்சியாக செயல்படுகிறோம். ஆளும் தரப்பின் கைக்கூலியாக செயல்படவில்லை. எமது பிள்ளைகளை பிரதமர் அலுவலகத்தின் பணிக் குழுவினராக பதவிக்கு அமர்த்திக்கொண்டு செயல்படவில்லை. என்னை “முட்டாள்“ என்று சொன்னவருக்கு இதனை குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

முட்டாள் யார்? அறிவாளி யார்? என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள். எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு அரசாங்கத்துக்கு ஆதரவாக யார் செயல்படு கிறார்கள் என்பதையும் மக்கள் அறிவார்கள். ஆகவே, சபாநாயகர் அவர்களே, இந்த பிரச்னைக்கு தீர்வு பெற்றுக்கொடுங்கள் - என்றார்.

## கொத்து,...

தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

இதேபோன்று, வரி, தீவனங்களின் விலை உயர்வால் உள்ளூர் பால் மாவின் விலைகளும் அதிகரித்தன. 400 கிராம் பைக்கெற் 100 ரூபாயால் உயர்த்தப்பட்டு 950 ரூபாயாகவும், ஆடையில்லா பால்மா 400 கிராம் பைக்கெற் 210 ரூபாயால் உயர்த்தப்பட்டு 1,050 ரூபாயாகவும், ஒரு கிலோ பால் மா பைக்கெற் 230 ரூபாயால் உயர்ந்து 2,350 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 7இல்)

## தீவுகளை...

சர் பிரசன்ன ரணதுங்க நேற்று தெரிவித்தார்.

இந்த அதிகார சபையை அமைப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

எமது நாட்டைச் சுற்றி 60இற்கும் மேற்பட்ட தீவுகள் உள்ளன. இந்தத் தீவுக் கூட்டத்தை அபிவிருத்தி செய்து சுற்றுலாத் துறையைக் கவர்வதன் மூலம் இந்நாட்டின் பொருளாதாரத்தை வினைத்திறனுடன் பயன்படுத்த முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

உலகின் பல நாடுகளில் அமைந்துள்ள தீவுகளின் பொருளாதார வாய்ப்புகள் மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் இலங்கையைச் சூழவுள்ள சிறிய தீவுகளின் பொருளாதார வாய்ப்புகள் இதுவரை சரியாக மதிப்பிடப்படவில்லை.

மாலைதீவு போன்ற தீவு நாடுகளில் இயங்கும் நீர் பங்களாக்கள் போன்ற ஹோட்டல்களை நிர்மாணிப்பதன் மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள சுற்றுலாப் பயணிகளை கவரமுடியும். எனவே, அந்தத் தீவுகளின் பௌதிக மற்றும் சமூக உட்கட்டமைப்புகள் முறையான திட்டத்தின்படி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஆனால் எமது நாட்டில் இதுவரையில் அவ்வாறான வேலைத் திட்டம் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தற்போது நமது நாடு பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருவதால், நாட்டைச் சூழவுள்ள தீவுகளை அபிவிருத்தி செய்து பொருளாதாரத்துக்கு மிகவும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதன் மூலம் அந்த நெருக்கடிகளுக்குத் தீர்வு காண முடியும் - என்றும் கூறினார். (ஐ)

## ஆர்ப்பாட்ட...

பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வன்முறை செயல்கள் இடம்பெற்றால் மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு இருப்பதாகத் தெரிவித்த அமைச்சர், அவ்வாறான செயல்களைத் தடுப்பதற்கு புதிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்று அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ)

## பொருளாதார...

தோட்டங்களில் பணிபுரிபவர்கள், பாதிக்கப்படக்கூடிய மலையக தமிழ் சமூக மக்கள், பொது சுகாதார ஊழியர்கள், சிவில் சமூக குழுக்கள், மனிதாபிமான அமைப்புகள், சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தனிப்பட்ட நிபுணர்களின் பணியாளர்கள் என 55 பேரை சந்தித்து நேர்கண்டது.

இதன்படி, இலங்கை இன்று, பட்டினி, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் ஆழ்ந்த வறுமையில் இருக்கும் நிலையில் இது செயல்பாடு அவசியம். நாடு இன்று பொருளாதார நெருக்கடியில் சுகாதாரம் உணவு மற்றும் சமூகப் பாதுகாப்புக்கான உரிமைகளைப் பாதுகாத்தல் மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகள்மீதான நெருக்கடியின் பேரழிவு தாக்கம் என்பவற்றில் மொத்த முறிவுக்கு அருகில் வந்துள்ளது.

அத்துடன் உயர்ந்த பணவீக்கம் ஏற்கனவே இருக்கும் சமூக சமத்துவமின்மையை அதிகப்படுத்தியுள்ளது. இந்த நிலையில் மக்களின் உரிமைகளுக்கான அணுகலை கொடூரமான முறையில் பறித்துள்ள இந்த நெருக்கடியின் மனித உரிமை தாக்கத்தை குறைக்க இலங்கை அதிகாரிகளும் சர்வதேச சமூகமும் விரைவாகச் செயல்பட வேண்டும் - என்று மன்னிப்பு சபையின் பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் பற்றிய ஆராய்ச்சியாளரான சன்ஹிதா அம்பாஸ்ட் கேட்டுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# மக்கள் மத்தியில் தன்னை பற்றி காணப்படும் தவறான பிம்பத்தை மாற்ற கோட்டா முயற்சி?

கொழும்பு, ஒக். 05

**மக்கள் மத்தியில் தன்னை பற்றிக் காணப்படும் தவறான எண்ணத்தை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ ஆரம்பித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

பல நாடுகள் புகலிடம் வழங்க மறுத்ததைத் தொடர்ந்து, நாட்டுக்கு திரும்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ மக்கள் மத்தியில் தன்னை பற்றிய எதிர்மறையான அபிப்பிராயங்களை மாற்றியமைத்து தன்னை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மக்கள் மத்தியில் தன்னைப் பற்றி காணப்படும் தவறான கருத்தை மாற்றுவதற்கும் தன்னைச் சுற்றியிருந்தவர்கள் தவறான முடிவுகளை எடுக்குமாறு தன்னைத் தவறாக வழிநடத்தினார்கள் எனக் கிராம மக்களுக்கு தெரிவிப்பதற்குமான இரகசிய பிரசார நடவடிக்கைகளை முன்னாள் ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார் என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோட்டாபய ஜனாதிபதியாக இருந்தவேளை சென்ற கிராமங்களுக்கு ஊடகப் பிரமுகரும் பெரும் வர்த்தகருமான ஒருவரின் ஏற்பாட்டில் குழுவொன்று செல்கின்றது.

இவர்கள் முன்னாள் ஜனாதிபதி பற்றிய தவறான கருத்தினை மாற்றுவதற்காக மக்களுடன் உரையாடவுள்ளதாக அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ தவறாக வழிநடத்தப்பட்டுள்ளார் என்றும் அவரது குடும்பத்தினர் உட்பட அவருக்கு நெருக்கமானவர்கள் அவரை தவறாக வழிநடத்தியுள்ளனர் எனவும் இவர்கள் கிராம மக்கள் மத்தியில் தெரிவித்து வருகின்றனர் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மதிய உணவுப் பொதி விலை அதிகரிக்குமா?

கொழும்பு, ஒக். 05

பெரும்பாலான உணவு வகைகளின் விலைகள் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி விதிக்கப்பட்டதன் பின்னர் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வரி விதிக்கப்பட்ட உடனேயே, உணவு தொடர்பான பெரும்பாலான பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளதாக சங்கத்தின் தலைவராணா அசேல சம்பத் தெரிவித்தார்.

மதிய உணவுப் பொதியின் விலையை அதிகரிப்பது தொடர்பில் நாங்கள் இதுவரை எந்தவொரு கூட்டு தீர்மானமும் எடுக்கவில்லை. ஆனால் பெரும்பாலான ஹோட்டல்கள் விலையை ரூ.10, ரூ.15, மற்றும் ரூ.20 என உயர்த்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விலையேற்றத்தால் பிரைட் ரைஸ், கொத்து மற்றும் இதர துரித உணவு வகைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

லிட்ரோ எரிவாயுவின் சமீபத்திய விலைக் குறைப்பு, மதிய உணவுப் பொதிகளின் விலையை ஒரு கணிசமான விலையில் வைத்திருக்க மிகவும் உதவியாக இருந்தது.

எவ்வாறாயினும், நாளை முதல் எரிவாயு சிலிண்டர்களின் விலையை லிட்ரோ நிறுவனம் குறைத்த பின்னர் முடிவை அறிவிப்போம் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)



# யாழ். பல்கலைக் கழகத்துக்கு நியூசிலாந்து தூதுவர் விஜயம்!

யாழ்ப்பாணம், ஒக். 05

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான நியூசிலாந்து தூதுவர் மைக்கல் ப்பிள்டன் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

இந்த விஜயத்தின்போது யாழ். பல்கலைக் கழகத்துக்கு சென்ற அவர் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவை சந்தித்து கலந்துரையாடினார். (அ)






# யாழ்.திருவடிநிலை கடலில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்..05

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை திருவடிநிலை கடலிலிருந்து சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

ஆண் ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருவடிநிலை கரையோரமாக அமைக்கப்பட்டுள்ள இறால் தொட்டிலில் சடலம் காணப்பட்டதாகவும் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப் படவுள்ளதாகவும் சடலத்தை அடையாளம் காண்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.(அ)

# பாராளுமன்றில் ரணில் வியாழன் விசேட உரை

கொழும்பு, ஒக். 05

நாட்டின் சமகால பொருளாதார நிலை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றவுள்ள உரை தொடர்பில் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கிடையிலான சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

சமகால பொருளாதார நிலைமை மற்றும் சர்வதேசத்தின் ஒத்துழைப்பு குறித்தும் ஜனாதிபதி தனது விசேட உரையில் கருத்துக்களை முன்வைக்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஜனாதிபதியின் விசேட உரை தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் ஒன்றினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)


## VACANCY

### ACCOUNTS ASSISTANT

A group of companies engaged in Media, Communications, Network and publications looking for an Accounts Assistant in Jaffna District.

Candidate should have passed part II of AAT or finalist, CIMA/ACA II stages with at least 2 years Audit experience. Basic English knowledge an added advantage.

Abilities to operate MS Word, Excel and accounting packages a must.

Attractive remuneration and Allowances offered to the right candidate.

**Send your CV with recently captured photo to Email: johnny@askcable.lk**


# கோதுமை மா, பாண் விலைகள் அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.05

சமூக பாதுகாப்பு ஒத்துழைப்பு வரி அறவிடப்பட்டமையை தொடர்ந்து கோதுமையை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவுக்கான விலையை 13 ரூபாவினால் அதிகரித்துள்ளன.

இதனால் வெதுப்பக உற்பத்தி பொருட்களில் விலையை அதிகரிக்க நேரிட்டுள்ளதாகவும் அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

இதற்கமைய பாண் ஒரு இறாத்தலின் விலை மேலும்10 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கோதுமை மாவின் விலையை 250 ரூபாவினால் குறைக்கவுள்ளதாக நேற்று முன்தினம் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்திருந்தார்.

அத்துடன், கோதுமை மா இறக்குமதியாளர்களிடம் டொலர்கள் இல்லாமை காரணமாகவே கோதுமை மா விலை அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கொள்கலன்கள் கோதுமையுடன் துறைமுகத்தில் தேங்கியிருப்பதாகவும், அவற்றை விடுவித்தால் கோதுமை மாவின் விலை குறைவடையும் எனவும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.(அ)

# பரீட்சை பிற்போடாமைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யத் தீர்மானம்

கொழும்பு, ஒக். 05

கல்வி பொது தராதர பத்திர உயர்தர பரீட்சையை பிற்போடாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றுகளில் மனு தாக்கல் செய்யவுள்ளதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

கல்வி பொது தராதர பத்திர உயர்தர பரீட்சையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடத்தவுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

இந்நிலையில் பரீட்சையை பிற்போடுமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சியின் தலைவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எனினும் கல்வி பொது தராதர பத்திர உயர்தர பரீட்சையை பிற்போடுவதற்கு எவ்வித தேவையும் ஏற்படவில்லை என கல்வி அமைச்சர் பாராளுமன்றில் அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே கல்வி பொது தராதர பத்திர உயர் தர பரீட்சையை பிற்போடாதிருக்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்தை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.10.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.